விலை: 30.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 052 வள்ளுவர் ஆண்டு 2053 தை 27 புதன்கிழமை (09.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## இலங்கை கடற்பரப்பில் இழுவைமடித் தொழில் முற்றாக இல்லாதொழிக்க வேண்டும்

### இந்திய கடற்றொழிலாளர்களுடன் காணொளி மூலமான கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

தமிழகத்துடனான தொப்புள்கொடி உறவினைப் பலப்படுத்த விரும்புகின்ற அதேவேளை, இலங்கை கடற்பரப்பில் இழுவைமடி வலைத் தொழிலில் ஈடுபடுவதை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் என்பதிலும் உறுதியாக இருப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ்

15

## ஆரியகுளத்தில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆரியகுளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நிறுத்தப்பட்டிருந்த மினி பஸ் மீது மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில்

15



## கொரோனா 35 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் மேலும் 35 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 22 ஆண்களும் 13 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

15

## நாட்டில் மேலும் +1,253 பேருக்கு தொற்று

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 1,253 பேருக்கு கோவிட் - 19 தொற்று உறுதியாகியுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை அடை

15

## இலங்கை தமிழ் மக்களுக்கு

# அதிகாரப் பரவல் மிகவும் முக்கியம்

## இந்திய வெளிவிவகார அமைச்சு செய்தி

(புதுடில்லி)

**இலங்கைத் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பரவல் மிகவும் முக்கியமானது. இலங்கையின் நலனுக்கு இது உகந்த விடயம் என இந்திய வெளிவிவகார அமைச்சு செய்திக் குறிப்பு ஒன்று வெளியிட்டுள்ளது.**

இந்தியாவிற்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல் பீரிஸுடனான சந்திப்பின்போதே இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் மேற்கண்ட விடயத்தை வலி

15

## தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் இந்தியா அழுத்தம் தரவில்லை

### வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயங்கள் குறித்து இந்தியா எந்தவிதமான அழுத்தங்களையும் கொடுக்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஸ்ட்ரேட்நியூஸ் க்ளோபல் இணையத்தளத்துக்கு வழங்கியுள்ள செவ்வியில் இந்த விடயத்தைக்

15



## நெடுந்தீவில் 11 இந்திய மீனவர்கள் கைதாகி மறியல்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி

15

## காங்கேசன்துறையில் 5 இந்திய படகுகள் ஏலம் விடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 5 இந்தியப் படகுகள் நேற்று ஏலம் விடப்பட்டுள்ளன.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்

15

## மீனவர் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத் தாருங்கள்

### இந்திய பிரதி உயர்ஸ்தானிகரிடம் சிறீதரன், சார்ள்ஸ் எம்.பி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத் தாருங்கள் என இந்திய பிரதி உயர்ஸ்தானிகரிடம் சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பிக்கள் கோரிக்கை

15



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பீரிஸ் - ஹர்ஸ் வர்தன் சந்திப்பு



இந்தியா சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ், இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஸ் வர்தன் சிறிங்லாவை சந்தித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சு இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இதன்போது மக்கள் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இந்திய பிரதமர் நரேந்திரமோடியையும் அவர் சந்திக்க எதிர்பார்த்துள்ளதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## ஆளும்-எதிர்த்தரப்பினர் சபையில் கடும் தர்க்கம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும் அரசாங்கத்தின் பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கும் இடையில் கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

பாராளுமன்ற அமர்வு நேற்று இடம்பெற்றபோதே இந்த வாய்த் தர்க்கம் ஏற்பட்டது

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை, அந்நிய செலாவணி நெருக்கடி உள்ளிட்ட 11 கேள்விகளை நிதி அமைச்சரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பியிருந்தார்.

இதற்கு பதிலளிக்காமை காரணமாகவே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும் அரசாங்கத்தின் பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கும் இடையில் கடுமையான வாய்த்தர்க்கம் இடம்பெறறது. (ம)

## கொவிட் தொற்றுக்குள்ளான எம்.பிக்களின் எண்ணிக்கை 50 ஆக அதிகரிப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவுக்கு கோவிட் 19 தொற்று உறுதியாகியுள்ளது.

இதன்படி, பாராளுமன்ற உறுப்பினர் டிலான்பெரேரா, கோவிட்-19 தொற்றுக்குள்ளான 50 ஆவது பாராளுமன்ற உறுப்பினர் ஆவார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல ஆகியோருக்கு இரு நாட்களுக்குமுன் கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம)


### விற்பனைக்கு

BDY வகையைச் சேர்ந்த NP - xxx இலக்கமுடைய பிளசர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. (10100)

077 158 1558

### ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் காண்டம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.

புதன், வியாழன் விசேடமாக வாசிக்கப்படும்.

மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும். சுபம்

தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்

கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில், யாழ்ப்பாணம். (10107)

தொடர்புகளுக்கு. 076 328 7119

### தேவை

புத்தக வெளியீட்டு நிறுவனமொன்றிற்கு தரம் 01 முதல் மாணவர்களுக்கான செயல்நூல்கள், சகல பாடங்களுக்குமான மாதிரி வினாப்பத்திரங்கள், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தயாரிக்கக்கூடிய மிக அனுபவமுள்ள அரச பாடசாலை பட்டதாரி ஆசிரிய, ஆசிரியைகள் தேவை.

☑ வீட்டில் இருந்தவாறே செய்யலாம்.

☑ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

[ உடன் தேவை ]

(C-3732)

077 722 0324


### முதலாம் வருட நினைவு



**கிறிஸ்ரபெல் அனோஜா அன்ரன்**

மலர்வு: 1965.6.25
உதிர்வு: 2021.2.09

உறவினில் கலந்து,
உணர்வுகளில் ஒன்றாகி,
உன்னத வழிகாட்டியாய்,
எம்மைச் சுமந்து
உய்வித்த அன்னையே!
இன்று உம்மை
சுமக்கின்றோம்
எம் நினைவுகளில்....
*நினைவுகளில் வாழும் ......*

**குடும்பத்தினர்**

மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.
"ஜொஸ் ஹட்ஸ்", கண்டி வீதி, மிருசுவில்

(C-3736)


FLASH SALE

01 Week Only

Call Now

076 666 5267 / 021 430 0044

## Yarl Smart Water Solution (pvt) ltd.

3ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு

## மாபெரும் விலைக்கழிவு!

நிலவும் குடிநீர் பிரச்சனைக்கு
நிரந்தரத் தீர்வு காண
இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துங்கள்!




~~38000/=~~ 29,999/=

இச்சலுகை ஒரு வாரம் மட்டுமே


YARL SMART Water Solution (Pvt) Ltd.
"Smart Water, Smart Life"
No.341 K.K.S Road, Jaffna.
Karadippoku Junchtion Jaffna Road, Kilinochchi.
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com

(C-3740)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஈழத்தமிழர்கள் தாக்கப்பட்ட போதெல்லாம் கொதித்தெழுந்தது தமிழகம்

# தொப்புள் கொடி உறவை அறுக்க சிங்கள ஆட்சியாளர்கள் சூழ்ச்சி



**–சீமான் ஆதங்கம்**

(சென்னை)

**தமிழக-ஈழத்து மீனவர்களிடையே பிளவையும் பகையையும் உருவாக்கத் துடிக்கும் சிங்கள ஆட்சியாளர்களின் விரோத செயற்பாட்டிற்கு இரையாகாது ஒரு இணக்கப்பாட்டை இரு நில மீனவர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கோரிக்கை விடுத்தார்.**

தமிழக - இலங்கை மீனவர் விவகாரம் தொடர்பில் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"தமிழகத்து மீனவர்களுக்கும், ஈழத்து மீனவர்களுக்குமிடையே பகைமையை ஏற்படுத்தி, ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளான தமிழ்த்தேசிய இன மக்களைத் தங்களுக்குள்ளேயே மோதிச்சண்டையிட வழிவகை செய்திடும் சிங்கள இனவாத அரசின் கொடுங்கோல் செயற்பாடுகள் பெரும் அதிர்ச்சியளிக்கின்றன.

ஈழப்பெருநிலத்தில் இரண்டு இலட்சம் தமிழர்களைக் கொன்றொழித்து, ஒரு பாரிய இனப்படுகொலையை நிகழ்த்தி, 800 இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை நடுக்கடலிலே படுகொலை செய்தும் இன்னும் வன்மம் தீராது தமிழர்களுக்குள்ளேயே பகை மூட்டும் சிங்கள இனவாத ஆட்சியாளர்களின் போக்குகள் கடும் கண்டனத்திற்குரியது.

யாழ்ப்பாணம் மாவட்டம், சுப்பர்மடம் கடற்பகுதியிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவத் தம்பிகள் தணிகை மாறன், பிரேம்குமார் ஆகியோர் படகு கவிழ்ந்து உயிரிழந்த செய்தியறிந்து பெரும் வேதனையடைந்தேன்.

அதேசமயம், அது விபத்துதானே ஒழிய, திட்டமிடப்பட்ட தாக்குதல் அல்ல; தமிழக மீனவர்கள் தொப்புள்கொடி உறவுகளான ஈழத்துச் சொந்தங்களை ஒருநாளும் பகையாளியாகக் கருதவோ, தாக்குதல் தொடுத்திடவோ மாட்டார்கள் என அறுதியிட்டுக் கூறுகிறேன்.

இம்மரணத்தைத் துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தி, ஈழத்து மீனவர்களுக்கும் தமிழக மீனவர்களுக்குமிடையே சண்டை மூட்டிவிட்டு, வேடிக்கைப் பார்க்கும் சிங்கள அதிகார வர்க்கத்தின் செயல்களுக்குப் பலியாகாது விழிப்போடும், தெளிவோடும் இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்து மீனவர்கள் தான் ஈழ மீனவர்களைத் தாக்கிக் கொன்றுவிட்டார்கள் என அந்நிலத்தில் பரப்புரை செய்வதும், தமிழகத்து மீனவர்களது படகுகளை ஈழத்து மீனவர்களுக்கு ஏலத்தில் விற்று, காழ்ப்புணர்வை தமிழக மீனவர்களிடம் உருவாக்க முயல்வதுமான போக்குகள் சொந்த இரத்தங்களுக்குள்ளே யுத்தத்தை நிகழ்த்த துடிக்கும் பெரும் மோசடித்தனமாகும்.

சிங்கள இனவாத அரசால் இனப்பேரழிவை தமிழர் தாயகம் எதிர்கொண்டபோது, தமிழகத்திலிருந்த 18 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்கள் உறவுகளைக் காக்க தங்கள் உயிர்களை இரையாக்கினார்கள்; அவர்கள் தங்கள் உள்ளத்திலே கொதித்த நெருப்பை உடலிலே கொட்டி தீக்குளித்து, போராட்ட நெருப்பைப் பற்ற வைத்தார்கள். ஈழத்தாயகம் எப்போதெல்லாம் தாக்குதலுக்கு உள்ளாகிறதோ அப்போதெல்லாம் தமிழகம் கொதித்தெழுந்து தங்கள் உறவுகளைக் காக்க உணர்வோடு வீதிக்கு வந்திருக்கிறது. ஆகவே, தமிழகத்துக்கும் ஈழத்துக்குமான தொப்புள் கொடி உறவை, வரலாற்று வழித்தொடர்பை எவராலும் மறுக்க முடியாது.

ஆகவே, தமிழகத்து மீனவர்களுக்கும் ஈழத்து மீனவர்களுக்குமிடையே பிளவையும் பகையையும் உருவாக்கத் துடிக்கும் இனவெறி சிங்கள ஆட்சியாளர்களின் தமிழர் விரோதச் செயற்பாடுகளுக்கு இரையாகாது அவர்களது உள் நோக்கத்தைப் புரிந்து கொண்டு, தமிழர் ஓர்மையையும், இணக்கப்பாட்டையும் கடைப்பிடிக்க வேண்டுமென இரு நிலத்தில் வாழும் தமிழர்களையும் உள்ளன்போடும், உரிமையோடும் கேட்டுக்கொள்கிறேன்" என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)


# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு- 29.08.1954 இறப்பு- 27.12.2021

## திருமதி. இராசலட்சுமி இராசேந்திரம்

கடந்த 27.12.2021 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி.இராசலட்சுமி இராசேந்திரம் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (09.02.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மா!!!
நாட்கள் நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது
உங்களின் நினைவு
நினைக்கும் போதெல்லாம்
நிலைகுலைந்து
போகின்றோம் அம்மா!!!
எங்களை ஆறாத் துயரில்
ஆழ்த்தி விட்டு
நீங்கள் மீளாத் துயிலில்
சென்றீர்களே அம்மா!!!
அம்மா!!!
காலனவன் கொரூரமாய்
மனித உருவில்
வந்தானோ?
பூப் போன்ற
எங்கள் அன்னையை
கொரூரமாய் கொன்றானோ??
உயிர் போகயிலே
என்னம்மா நினைத்தீர்கள்???

எங்கள் தெய்வத்திற்கு
எப்படியெல்லாம்
வலித்திருக்கும்???
நெஞ்சு பொறுக்குதில்லையே
இந்த நிலை கெட்ட
மனிதனை நினைத்து
அன்பினால், பண்பினால்,
நட்பினால்
ஆளுமையினால்
எங்களை ஆண்டீர்களே!!!
எங்கள் உள்ளங்களில்
குடியிருக்கும் அன்னையை என்றும்
மறவோம் உங்கள் ஆத்மா
இறைபதமடைந்து சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(10037)


இல.71, குமரபுரம், பரந்தன்.

தகவல்:
076 708 2460 /076 759 1259

தங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை படைத்த டிக்கெட் விற்பனை




2022 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற விருக்கும் இருபது-20 உலக கிண்ண தொடரில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டிக்கான டிக்கெட்கள் விற்பனை தொடங்கிய 5 நிமிடங்களுக்குள் விற்றுத் தீர்ந்தன.

அவுஸ்திரேலியாவில் 2020 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உலக கிண்ண இருபது-20 தொடர்கள் கொரோனா பரவல் அச்சம் காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், இப்போட்டிகள் 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 முதல் நவம்பர் 13 வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

இந்த உலகக்கிண்ண தொடருக்கான டிக்கெட் முன் பதிவில் இதுவரை 2 இலட்சம் டிக்கெட்கள் விற்பனையாகியுள்ள நிலையில், கிரிக்கெட் ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டிக்கான டிக்கெட்கள் விற்பனை தொடங்கிய சில நிமிடங்களிலே விற்றுத் தீர்ந்தன.

இந்த போட்டி அவுஸ்திரேலியாவில் உள்ள மைதானத்தில் ஒக்டோபர் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இது குறித்து ஐசிசி ஆண்கள் இருபது-20 உலகக் கிண்ண 2022 இன் உள்ளூர் ஏற்பாட்டுக் குழுவின் தலைமை நிர்வாக அதிகாரி மிச்செல் என்ரைட் பேசுகையில், "ரசிகர்களின் ஆதரவு மிக அருமையாக இருப்பதாகவும், 2020 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த போட்டியை காண டிக்கெட் முன்பதிவு செய்த ரசிகர்களுக்கு இந்த ஆண்டு முன்பதிவில் முன்னுரிமை மற்றும் சலுகைகள் வழுங்கியதில் பெருமிதம் கொள்கிறோம் என தெரிவித்தார்".

இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் உலகக்கிண்ண தொடரில் 45 போட்டிகள் மொத்தம் நடைபெற இருப்பதாகவும், அதில் 8 இலட்சம் வரை பார்வையாளர்கள் பங்கேற்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (4)

# குளிர்கால ஒலிம்பிக்; முதலிடத்தில் சீனா



சீனாவின் பீஜிங் நகரில் நடைபெற்று வரும் குளிர்கால ஒலிம்பிக் போட்டித் தொடரின் பதக்கப்பட்டிய லில். தொடரை நடத்தும் சீனா முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

சீனா பதக்கப் பட்டியலில் மூன்று தங்கப் பதக்கங்கள், இரண்டு வெள்ளி பதக்கங்கள் என மொத்தம் ஐந்து பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது.

இதனைத் தொடர்ந்து சுவீடன், மூன்று தங்கப்பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும், ரஷ்யா இரண்டு தங்கப் பதக்கங்கள், மூன்று வெள்ளிப் பதக்கங்கள், இரண்டு வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் ஏழு பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது.

இரண்டு தங்கப் பதக்கங்கள், இரண்டு வெள்ளிப் பதக்கங்கள், ஒரு வெள்ளி பதக்கம் என மொத்தம் ஐந்து பதக்கங்களுடன் நெதர் லாந்து நான்காவது இடத்தில் உள்ளது.

ஜேர்மனி இரண்டு தங்கப் பதக்கங்கள், ஒரு வெள்ளிப் பதக்கம் என மொத்தம் மூன்று பதக்கங்களுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளது.

இதனையடுத்து நோர்வே, ஸ்லோவேனியா, இத்தாலி, கனடா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முறையே ஐந்து முதல் பத்து இடங்களைப் பிடித்துள்ளன. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2507

### சாந்தி

நான் நல்லா படிச்சு டாக்டர் ஆகி கொரோனாவுக்கு மருந்து கண்டு பிடிப்பேன்




கொரோனா: அடி செருப்பால நீ பாஸ் ஆனதே என்னால தான் தெரிஞ்சுக்க

### நிருஜன்


அடேய்! அட்வைஸ் பண்ணா ஒழுங்கா அட்வைஸ் பண்ணுங்கடா...



அது என்னடா எல்லா அட்வைஸையும் பண்ணி முடிச்ச அப்புறம் உன் மனசுக்கு என்ன தோணுதோ அதை செய் என்று என்னை குழப்பிவிட்டு போறீங்க...

### தர்சினி

சில கடன்களை திருப்பி செலுத்தவே முடியாது...



### கீர்த்தன்

வீட்டில ரீ.வி ஓடும்போது ரீ.வி பார்க்கிறவங்கள விட ரீ.வியை ஓட விட்டு செல்போன் பாக்கிறவங்க தான் அதிகம்...



### சர்மி

திருமணத்தில் போடப்படும் மூன்று முடிச்சை விட பலம் வாய்ந்தது...



ஹோட்டலில் தரும் சாம்பார் பக்கெட்டின் முடிச்சு



நல்ல பசில இருக்கும் போது அத அவுக்க நான் பட்டபாடு இருக்கே ஐயோ...ஐயோ

### சிவா

இந்த பெப்ரவரி மாதம் நடக்குற நல்லது என்னன்னா...



௨௮ நாளுக்கு வேல பாத்துட்டு ௩௧ நாளைக்கு உள்ள சம்பளத்தை வாங்கிக்கலாம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

அமரர்.
## மோசஸ் சொலமன்
(மொழி பெயர்ப்பாளர்)

தோற்றம்- 20.06.1940
மறைவு- 08.01.2022



எமது யாழ்ப்பாண கல்வி வலய யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி விசேட கல்வி ஆசிரியர் திருமதி. லில்லி ஹிமெல்டா மூர்த்தி அவர்களின் தந்தையார் **மோசஸ் சொலமன்** அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். (10092)

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விசேட கல்வி பிரிவு
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# துயர் பகிர்கின்றோம்



தோற்றம் 02 - 11 - 1955

மறைவு 01 - 06 - 2021


அமரர். **முதலி இரத்தினம்**

எமது யாழ்ப்பாணக் கல்வி வலய யா/அச்சுவேலி மத்திய கல்லூரி விசேட கல்வி ஆசிரியர் திரு. **இரத்தினம் ஜெயமதன்** அவர்களின் தந்தையார் **முதலி இரத்தினம்** அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (10094)

விசேட கல்விப் பிரிவு, வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.

# இந்தியாவை ஏமாற்றும் நடவடிக்கையே பீரிஸின் இந்திய விஜயம்- விக்கி எம்.பி



(கொழும்பு)

இந்தியாவை தனது நட்பு நாடென காட்டிக் கொள்ளும் விதமாக, இந்தியாவிற்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்கி இந்தியாவை ஏமாற்றும் நடவடிக்கையே இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் இந்திய விஜயம் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

எனவே வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸின் வாக்குறுதிகளை நம்பி இந்தியா ஏமாந்துவிடக் கூடாது எனவும் அவர் இந்திய ஊடகம் ஒன்றிடம் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு அதிகார ப்பகிர்வு வழங்கப்படும் என்பது உள்ளிட்ட இந்தியாவிற்கு எந்தவொரு வாக்குறுதியையும் இலங்கை அரசாங்கம் நிறை வேற்றவில்லை.

ஆகவே இனப்படுகொலை குறித்த சர்வதேச விசாரணையை இந்தியா நேரடியாக வலியுறுத்தா மல்விட்டாலும் ஏனைய நாடுகளின் ஊடாக அதனை முன் னெடுப் பதற்குரிய இராஜ தந்திர நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும்.

மேலும் இந்தியாவினால் எவ்வளவு துாரத்திற்கு எமது அதிகாரங் களைப் பலப்படுத்த முடியுமோ அதுவே இந்தியா வின் பாதுகாப்பிற்கும் கைகொ டுக்கும் என்றும் சி.வி. விக் னேஸ் வரன் தெரிவித்தார். (நி)

# 31ம் நாள் நினைவஞ்சலி

அமரர்.
## சந்தணம் சரஸ்வதி



| மண்ணில் | மனதில் |
|---|---|
| 11.04.1946 | 10.01.2022 |

பாசமொடு தாலாட்டி பகலிரவு அணைத்தேத்தி
நேசம்நிறை நெஞ்சத்தில் நிதம்வாழும் எம் தாயே
ஆருமிட்ட சாபமிதோ அடுத்தடுத்து எமைப்பிரிந்தீர்
ஆறுதலே யில்லாமல் அல்லலுற வைத்துவிட்டீர்

கோடி கொடுத் தாலுமினிக் கிடையாத தாயன்பும்
குடியிருந்த தெய்வத்தின் குளிர்நிலவாம் திருமுகமும்
கூடிவாழ்ந்த சந்தோசம் குதூகலமும் போனதம்மா
கூவிநிதம் அழைக்கின்றோம் குறைதீர்க்க வாருமம்மா

(10030)

09.02.2022 புதன்கிழமை அன்று இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

இல.96, சந்தணம் சரஸ்வதி இல்லம்,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

குடும்பத்தினர்.

# இராசிபலன்

09.02.2022
தை 27, புதன்கிழமை
அட்டமி முற்பகல் 11.36 மணிவரை

கார்த்திகை பின்னிரவு 2.51 மணிவரை
சுபநேரம் - 5.05-6.35 மணிவரை
இராகுகாலம் -12.35-2.05 மணிவரை

சந்திராஷ்டமம்-சித்திரை
கார்த்திகை விரதம்

வளவன்

**மேஷம்** காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், காரிய அனுகூலமுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சகமுண்டு.

**துலாம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், பிரயாண பயமுண்டு.

**மகரம்** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுப செய்திகள் வந்து சேரலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, பெரியோர் சந்திப்புண்டு.

**சிம்மம்** குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தாய் வழி உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், தேவையற்ற குழப்பங்களைத் தவிர்பது நல்லது.

**கன்னி** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.

**தனுசு** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன சுகமுண்டு.

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், தொழிலில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு, முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம்.

நியாயமான கோபத்தை வீணாகச் செலவழித்து விடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடமாடும் சேவை மூலம் ஏக்கர் வரி அறவீடு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி கிழக்கு கமக்காரர் அமைப்புக்குட்பட்ட பகுதியில் நெற் செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகளின் நெற்காணிக்கான 2022 ஆம் ஆண்டுக்கான ஏக்கர் வரி அறவீடு கைாடி கமநல சேவை நிலையத்தின ரால் நடமாடும் சேவை மூலம் இன்று 9 ஆம் திகதி புதன் கிழமை நாவற்குழி கிழக்கு அறிவொளி மன்ற பொது நோக்கு மண்டபத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை நடைபெறவுள்ளது.

மேற்படி ஏக்கர் வரியினை முன்கூட்டியே செலுத்துவதன் மூலம் எதிர்கால நெற்பயிர் செய்கை தொடர்பான பதிவுகளையும் உதவிகளை பெற்றுக் கொள்ள உதவியாக இருக்கும் என நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பு அறிவித்துள்ளது. (5)

# ஆட்டோ தரிப்பிடத்திற்கு
## இடம் ஒதுக்கித் தருமாறு வேண்டுகோள்

(கரணவாய்)

நெல்லியடி பேருந்து தரிப்பு நிலையத்திற்கு அருகில் கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு உரித்தான இடத்தில் முச்சக்கரவண்டி தரிப்பிடத்திற்கு இடம் வழங்கப்பட்ட போதிலும் அந்த இடத்தில் முச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்கு தற்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அவர்கள் பிரதான வீதியோரங்களில் முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பதனால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதோடு விபத்துகளும் ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவரை காலமும் நெல்லியடி பேருந்து தரிப்பு நிலையத்தில் முச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டன. ஆனால் நெல்லியடி பேருந்து தரிப்பு நிலையம் இலங்கை போக்குவரத்து சபைக்கு உரித்துடையது எனக்கூறி அதில் முச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் பேருந்து தரிப்பு நிலையத்திற்கு அருகாமையில் கரவெட்டி பிரதேச சபைக்குரித்தான இடத்தில் முச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்கு அனுமதி வழங்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

30 வருடங்களாக நெல்லியடி பேருந்து நிலையத்துக்கு அருகாமையில் தரிப்பிடமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இன்று தரிப்பிடம் இல்லாமல் தத்தளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தமக்கு உடனடியாக நிரந்தர தரிப்பிடம் ஒன்று பிரதேச சபையினால் வழங்க வேண்டுமென ஆட்டோ சங்கத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-60)

# ஆளுமைமிக்க சமுதாயத்தை உருவாக்க வேண்டும்
## தவத்திரு வேலன் சுவாமிகள்



(யாழ்ப்பாணம்)

மனிதப் பண்பியல்புகளோடு ஆளுமையுள்ள ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டிய தூரநோக்கில் அறநெறிப் பாடசாலைகள் அமைந்துள்ளன என்று சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

நெடுந்தீவு செல்லம்மாள் வித்தியாலய வளாகத்தில் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் செல்லம்மாள் ஞாபகார்த்த அறநெறி பாடசாலை மற்றும் செல்லம்மாள் ஞாபகார்த்த முன்பள்ளி ஆகியவற்றிற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர்களுக்கு ஆரம்பக் கல்வியை மேம்படுத்தவும் அறநெறியை போதிப்பதற்காக வும் எடுக்கப்படும் இந்த முயற்சி சிறப்பாக அமைய வேண்டும்.

இன்று நமது மண்ணிலேயே சிறுவர்களை இளம் சந்ததியினரை நல்ல வழியில் ஆன்மிக ரீதியில் வழிகாட்டி வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பில் அனைவரும் இருக்கின்றோம்.

எமது பண்பாடு கலை கலாசார விழுமியங்களைப் பேணக் கூடிய விதத்தில் மனித பண்பியலோடு ஆளுமையுள்ள ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டிய தூர நோக்கில் இந்த அறநெறிப் பாடசாலைகள் முக்கிய பாகங்களை வகிக்கின்றன.

சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் சிவன் மானுட மேம்பாட்டு நிறுவனத்தின் நிறுவனத்தைச் சேர்ந்த கலியுகவரதன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நெடுந்தீவு பிரதேச செயலாளர் சத்தியசோதி, ஓய்வு நிலை விரிவுரையாளர் சோ.பத்மநாதன் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (5-4-33)



இலங்கை சாரணர் சங்க யாழ்.மாவட்டக் கிளையின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும், யாழ்.மாவட்டச் சாரணர் சங்கத்தின் மரபு வழிக் கிளைச் சபைத் தலைவருமான க.மகேசன் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் சாரணர் சங்கத்தின் பிரதம ஆணையாளர் ஜெனபிரித் பெர்னாண்டோ, வடக்கு- கிழக்கு விசேட ஆணையாளர் எஸ்.எப்.எம்.முகீட், மாவட்ட ஆணையாளர் இ.தவகோபால், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், உதவி மாவட்டச் செயலாளர் திருமதி.எஸ்.சி.என்.கமலராஜன் மற்றும் பாடசாலை அதிபர்கள், சாரணர் இயக்கத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படம்- ரவிசாந்)




*Sri Mahakaliamman Devasthanam, Valaithoddam, Iyakkachchi Temple Trust*

**ஆலய நிர்வாக உத்தியோகத்தர்**

இயக்கச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ மகா காளியம்மன் ஆலயத்துக்கு இந்து மதத்தை சேர்ந்த , ஆலய வழிபாடுகளில்ஈடுபாடுள்ள, சமூகசேவை மனப்பான்மையுள்ள நிர்வாக உத்தியோகத்தர் தேவை .

ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

ஆலயத்தை அறங்காவலர் சபையின் வழி காட்டலுக்கேற்ப நிர்வகித்து நித்திய பூசைகளை குறிப்பிட்ட நேரத்திற்குநடாத்தி ஆலய உற்சவங்களையும், சிறப்பு பூசைகள் ஆகியவற்றையும் ஆகம முறைப்படி நடை பெறுவதை உறுதி செய்வதும் பிரதான கடமைகளாகும்.

ஆலய செயற்பாட்டுக்கு தேவையான முழு நிர்வாகத்தையும் பொறுப்புடன் ஏற்று செயற்படுவது இப் பதவிக்குதேர்ந்தெடுக்கபடும் நபரின் கடமையாகும்.

ஆலயத்தின் அண்மித்த பகுதியில் வாழும் மக்களின் சமய சமூக கல்வி மேம்பாட்டுக்கு உதவுவதும் இந்தநிலைக்குரிய பணியாகும்.

ஆலயம் அமைந்துள்ள அண்மித்த பகுதியிலிருந்து கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமைவழங்கப்படினும் , மற்றைய பிரதேசங்களிலிருந்து கிடைப்பவையும் சமமாக பரிசீலிக்கப்படும்.

ஆலயத்தோடு மிகுந்த ஈடுபாடுள்ள ,தேர்ந்தெடுக்கப்படும் நபருக்கு தகுந்த ஊதியமும் வழங்கப்படும் .

தொடர்பு கொள்ளவும் :
மின்னஞ்சல் : sr@isfindustries.com
தொலைபேசி : 0772078455
தபாலில் : 3/4 , Rockwood Place ,Colombo 07

(இ-1623) QUICKADS



**60 வது பிறந்த நாளும்**
**சேவை நலன் பாராட்டும்**



33 வருடங்கள்
ஆசிரியராக, உப அதிபராக,
அதிபராக கல்விச் சமூகத்திற்கு அளப்பரிய
சேவையாற்றி 09.02.2022 இன்று
அகவை அறுபதில் ஓய்வுபெறும்.

திருமதி.
**தவலட்சுமி பேரின்பம்**

அவர்களின் ஓய்வுக் காலம்
சிறப்பாக அமைய
அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்-
அண்ணா, அண்ணி, மருமக்கள்,
மகன், பேர்த்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிவருடிகளை திருப்திப்படுத்தவே புதிய புதிய திட்டங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சாடல்

(கொழும்பு)

அரசாங்கமானது புதிதாக ஒரு வேலைத் திட்டத்தினை ஆரம்பித்து உழைக்கும் மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கப் பார்க்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியத்தில் 25 சதவீத வரியினை விதித்து ஒரு இலட்சம் வேலைத்திட்டத்தின் மூலம் தமது அடிவருடிகளை திருப்திப்படுத்தப் பார்க்கின்றது என்றும் இந்த மோசமான செயலை நடைமுறைப்படுத்தக் கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார். (நி)

### வடக்கிற்கு ஆதரவாக

# கடற்றொழில் அமைச்சுக்கு முன்பாக வலுப்பெற்ற மீனவர்கள் போராட்டம்



(கொழும்பு)

இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு தீர்வு கோரி கடற்றொழில் அமைச்சுக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தினால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா: சூரி,செவ் 5 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: Q.S (கட்டார்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச, தனியார் உத்தியோகம் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12263

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூராடம் 3
கி.பா: 36¾ சூரி, செவ் 11 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: சொந்த வாகனங்களை வாடகைக்கு விடுதலும் வியாபாரம்
எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12264

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பரணி 2
கி.பா: 26¼ சூரி, செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: லண்டன் ( PR உண்டு இந்தியா வந்து திருமணம் செய்யலாம்) பரசிற்ற மோல் கொம்பனி
எதிர்பார்ப்பு: உள்நாட்டு படித்த பெண்
தொ.இ: B/12266

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 1
கி.பா: சூரி 9 செவ் 6 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி தாதி
எதிர்பார்ப்பு: குறைந்தது A/L படித்த பெண்
தொ.இ: B/12267

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பரணி 1
கி.பா: 08 செவ் 3 சூரி 12
உயரம்: 5'1'
தகைமை/தொழில்: BBA,ACCA,MBA Manager Business Acquisition And Development -LOLC
எதிர்பார்ப்பு: தகுந்த அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ: G/12397

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: மூலம் 1
கி.பா: 13½ சூரி 2 செவ் 12 இல்
உயரம்: 162 cm
தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/12400

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: சூரி 5 செவ் 9 இல் உயரம்:4'8"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு : வெளிநாடு மட்டும்
தொ.இ:G/8157

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா: சூரி 9 செவ் 6 இல் உயரம்: 5'2"
தகைமை/தொழில்: வீடமைப்பு அதிகார சபையில் வேலை
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/8187

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# மணிவிழா வாழ்த்து

## திருமதி. தவலட்சுமி பேரின்பம்



### சேவைக்காலம்

மு/பாண்டியன்குளம் ம.வி- ஆசிரியர் (06.08.1988 - 24.01.1993)
மு/மூன்று முறிப்பு அ.த.க பாடசாலை- பதில்அதிபர் (25.01.1993 -31.12.1994)
மு/மூன்று முறிப்பு அ.த.க பாடசாலை- அதிபர் (01.01.1995- 14.09.1999)
மு/பனங்காமம் அ.த.க பாடசாலை- அதிபர் (12.07.2002 - 30.01.2011 )
யா/சென்ஜோசப் வித்தியாலயம்-(இணைப்பு) (01.02.2011 - 09.06.2011)
யா/பாசையூர் சென் அன்ரனிஸ் றோ.க.
மகளிர் வித்தியாலயம்- அதிபர்- (01.02.2011-08.02.2022)



### பங்குத் தந்தையின் வாழ்த்துச் செய்தி

பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க மகளிர் வித்தியாலயத்தில் கடந்த பதினொரு வருடங்கள் அதிபராக பாஷையூர் சென். ஆன்ரனீஸ் றோ.க மகளிர் வித்தியாலயத்தில் கடந்த பதினொரு வருடங்கள் அதிபராக அர்ப்பணிப்புடன் நற்பணி புரிந்து தனது அறுபதாவது அகவை நிறைவில் கல்விப்பணியில் இருந்து ஓய்வுபெறும் திருமதி தவலட்சுமி பேரின்பம் அவர்களை உளமார வாழ்த்துகின்றேன்.

இவர் தனது சேவைக்காலத்தில் மாணவர்களிடையே கல்வியில் படிப்படியான வளர்ச்சியையும் பாடசாலையில் பற்றினையும் ஏற்படுத்தி குறிப்பாக மாணவர்களை சமய, ஆன்மீக, சமூக செயற்பாடுகளில் ஈடுபடவைத்ததுடன் பாடசாலையை தரமுயர்த்தி ஆசிரியர்களையும் மாணவர்களையும் செவ்வனே வழிநடத்தி சிறந்த தேசிய மட்ட விருதுகளையும் பெறவைத்துள்ளார். அத்துடன் வெளிநாடுகளிலும் அயலிலும் உள்ள பாடசாலை சமூகத்துடன் நல்லுறவைப்பேணி அவர்களது ஆதரவுடன் பல்வேறு பௌதீகவள வசதிகளையும் பெற்று பாடசாலையை அபிவிருத்தி செய்தார்.

இவரின் அர்ப்பணிப்பு நிறைந்த கல்விப்பணிக்கு பாராட்டைத் தெரிவிப்பதுடன் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ இறையருள் வேண்டி நிற்கின்றேன்.

**அருட்பணி ஜெறோ செல்வநாயகம்**
**பங்குத்தந்தை,**
**புனித அந்தோனியார் ஆலயம்**
**பாஷையூர்.**

**எமது பாடசாலையின் அதிபராக பொறுப்பேற்ற காலத்திலிருந்து பாடசாலையின் கல்வித்தரத்தை உயர்த்தியதுடன் இணை பாடவிதானத்தில் தேசிய சாதனைகளையும் ஏற்படுத்தி சமூகத்துடன் நெருங்கிய நல்லுறவையும் பேணி வகை II(Type 2) தரத்திலிருந்து 1C தர பாடசாலையாக தரமுயர்த்திய பெருமைக்குரிய அதிபரின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் அவரது ஓய்வுக்காலம் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்**


**பாடசாலைச்சமூகம்**
**யா/பாஷையூர் சென் அன்ரனீஸ் றோ.க மகளிர் வித்தியாலயம்.**



### வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

மணிவிழாக்காணும் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அதிபர் திருமதி தவலட்சுமி பேரின்பம் அவர்கள் சிறந்த தலைமைத்துவம் கொண்ட ஆளுமை மிக்க அதிபராக இன்றுவரை செயலாற்றுவது குறிப்பிடத்தக்கது. வகை 2(Type2) பாடசாலையாக இருந்த இப்பாடசாலையினை 1C தரப்பாடசாலையாக தரமுயர்த்திய பெருமை இவரைச்சேரும். ஓய்வுக்கு பின்னரான வாழ்க்கை சுபீட்சமானதொன்றாக அமையட்டும். மணிவிழா வாழ்த்துக்கள்.

**திரு முத்து.இராதாகிருஷ்ணன்.**
**வலயக்கல்விப்பணிப்பாளர்,**
**வலயக்கல்விப்பணிமனை,**
**யாழ்ப்பாணம்.**



### உதவிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/யாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க மகளிர் வித்தியாலய அதிபர் திருமதி தவலட்சுமி பேரின்பம் அவர்களது மணிவிழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.தாயைப்போல் மாணவிகளை மட்டுமன்றி ஆசிரியர்களையும் அரவணைத்து வழிகாட்டியவர். இவரது காலத்தில் வித்தியாலயம் பாட .இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மட்டுமன்றி பௌதிக வளங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டன. அதிபர் அவர்களது ஓய்வு காலம் மகிழ்வுடன் அமைய வாழ்த்துகின்றேன்.

**திரு அ.சுபாகரன்**
**உதவிக்கல்விப்பணிப்பாளர்,**
**மாகாணக் கல்வித்திணைக்களம்,**
**வடக்குமாகாணம்.** (10096)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாய தடுப்பூசியை எதிர்த்து நியூசிலாந்திலும் போராட்டம்



(வெலிங்டன்)

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இரண்டு டோஸ் தடுப்பூசி செலுத்தியவர்கள், பூஸ்டர் தடுப்பூசி செலுத்திக் கொள்ள பெரும்பாலான நாடுகள் வலியுறுத்தியுள்ளன. அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளில் பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

இதற்கு பெரும்பாலான மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. கட்டாயம் என்பது எங்களது தனிமனித சுதந்திரம் பாதிக்கிறது என கருத்து தெரிவித்து வருகின்றனர்.

உச்சக்கட்டமாக கனடாவில் லொறி சாரதி முக்கியமான தெருக்களில் லொறிகளை நிறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். இது அந்நாட்டு பிரதமருக்கு சங்கடத்தை ஏற்படுத்தியது. அவர் இரகசிய இடத்தில் தஞ்சம் அடையும் நிலை ஏற்பட்டது. அவசர பிரகடனம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நியூசிலாந்திலும் கட்டாயம் தடுப்பூசி நடைமுறைக்கு எதிர்ப்பு தெரிவித்து டிரக் சாரதிகள் பாராளுமன்ற வீதிகளில் டிரக்குகளை நிறுத்தி போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

கொரோனாவைரஸ்தொற்றை கட்டுப்படுத்த கடுமையான விதிமுறைகள் நடைமுறைப்படுத்திய நாடுகளில் நியூசிலாந்தும் ஒன்று. கொரோனா பாதிப்பு அதிரிகரிப்பு காரணமாக அந்நாட்டு பிரதமர் தனது திருமணத்தை ஒத்தி வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# நான்கு நாட்கள் சிறையில் செலவிடலாம்

(ஜெனிவா)

நான்கு நாட்கள் சிறையில் செலவிட வருமாறு சுவிஸ் மாகாணம் ஒன்று தன்னார்வலர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

சூரிச் இல் புதிதாக சிறை ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

அதில் கைதிகளை அடைப்பதற்கு முன், சோதனை முயற்சியாக, அந்த சிறையில் தங்கியிருக்க வருமாறு தன்னார்வலர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த சோதனை முயற்சியில் பங்கேற்கும் தன்னார்வலர்களுக்கு பணம் எதுவும் கொடுக்கப்படாது. ஆனால், மூன்று வேளை நல்ல சாப்பாடு சாப்பிட்டுவிட்டு அமைதியாக ஓய்வெடுக்கலாம்

சூரிச்சில் வாழும் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த சோதனை முயற்சியில் பங்கேற்கலாம். குறைந்தபட்சம் அவர்கள் நான்கு நாட்கள் சிறையில் தங்கியிருக்க வேண்டும்.

நான்கு நாட்கள் சிறையில் இருக்க பிடிக்கவில்லையென்றால், இடையிலேயே வெளியேறவும் அனுமதி உண்டு.

சிறை எப்படி இருக்கும் என தெரிந்துகொள்ள ஆர்வம் உள்ளவர்கள் இந்த சோதனை முயற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.

காதலர் தினத்தையொட்டி, எதையாவது வித்தியாசமாக முயற்சி செய்யலாம் என விரும்புபவர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஆனால் அவர்கள்ஜோடியாக சிறையில் தங்க முடியாது.

ஆண்கள், ஆண்களுக்கான சிறையிலும், பெண்கள் பெண்களுக்கான சிறையிலும் தான் தங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு சுற்றுலாப் பயணிகளை வரவேற்க தயாராகும் அவுஸ்திரேலியா




(கன்பெரா)

இம் மாதம் 21 ஆம் திகதி முதல் முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட பயணிகளை வரவேற்கவுள்ளதாக அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

கொவிட் தொற்றுப் பரவலை மெதுவாக்க அதன் சர்வதேச எல்லைகளை முதன் முதலில் மூடிய அவுஸ்திரேலியா சுமார் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

நியூசிலாந்து, சிங்கப்பூர், ஜப்பான் மற்றும் தென்கொரியாவுடனான நிகழ்ச்சிகளின் மூலம் அவுஸ்திரேலியா தனது எல்லைகளை படிப்படியாகத் திறந்துவிட்டதாகவும், கடந்த ஆண்டு இறுதியில் சர்வதேச மாணவர்கள் மற்றும் பொருளாதார புலம்பெயர்ந்தோரை வரவேற்கத் தொடங்கியதாகவும் பிரதமர் ஸ்கொட் மோரிசன் கன்பெராவில் நடந்த ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், 'நிபந்தனை என்னவென்றால், நீங்கள் அவுஸ்திரேலியாவிற்கு வருவதற்கு இரண்டு முறை தடுப்பூசி போட வேண்டும்.

அதுதான் விதி. எல்லோரும் அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என தெரிவித்தார் (நி-3)


## துயர் பகிர்கின்றோம்

அமரர். திருமதி.

**புஸ்பராணி சின்னராசா**



தோற்றம் 21. 05. 1953

மறைவு 13. 08. 2021

எமது யாழ்ப்பாண கல்வி வலய யா/திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை விசேட கல்வி ஆசிரியர் திரு.சின்னராசா குகன் அவர்களின் தாயார் திருமதி புஸ்பராணி சின்னராசா அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விசேட கல்வி பிரிவு

வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.


# ஆப்கானில் பனிச்சரிவில் சிக்கி 20 பேர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் பனிச் சரிவில் சிக்கி 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் 15 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. ஏனையோரை தேடும் பணி இடம்பெற்று வருகிறது.

ஆப்கான்-கிழக்கு பகுதியில் இந்த அனர்த்தம் இடம்பெற்றதாக ஆப்கான் அரசு ஊடகமான பக்தர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது. (நி)


## கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர (உயர்தர) பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்-2022

வடக்கு மாகாண கூட்டுறவுப் பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சபையினால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சி நெறியானது எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான பயிற்சியாளர்களாக சங்கப்பணியாளர்களுடன் வெளிவாரி மாணவர்களும் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். ஆகவே ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் 28.02.2022 திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ செயலாளர், முல்லைமாவட்ட கூட்டுறவு சபை, ஒட்டுசுட்டான் என்ற முகவரிக்கு தங்களது சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- இப்பயிற்சி நெறி பத்து மாதங்கள் முழுநேர வகுப்புக்களாக நடைபெறும்.
- பயிற்சி முடிவில் மேற்படி நிறுவனத்தினால் பெறுமதியான சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படும்.
- கூட்டுறவுச் சங்கங்களின் வேலைவாய்ப்பு வெற்றிடங்களுக் கேற்ப உள்வாங்கப்படும்.

**வெளிவாரி மாணவர்களுக்கான நுழைவுத்தகைமை**

க.பொ.த.(உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது மூன்று பாடங்களில் (கணிதம் அல்லது வர்த்தகம் பாடங்களில் ஏதாவது ஒன்று உட்பட) சித்தி பெற்றவர்களும், அதற்கு மேலான தகைமையுடையவர்களும் வெற்றிடங்களுக்கு ஏற்ப அனுமதிக்கப்படுவர்.

**எம்.ஏ.முஸவ்பர்,**
**செயலாளர்,**
**முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சபை,**
**மேலதிக தகவலுக்காக**
**076 001 6678**

(c-3737)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்திக்குத்துக்குள்ளாகி உயிருக்கு போராடியவரை பெரு முயற்சியின் பின் காப்பாற்றிய மருத்துவர்கள்

(நெளுக்குளம்)

கத்திக் குத்துக்கு இலக்காகி இதயப் பெருநாடி கிழிந்த இளைஞர் வவுனியா மருத்துவமனை மருத்துவர்களால் காப்பாற்றப்பட்டார்.

கடந்த முதலாம் திகதி இரவு 8 மணியளவில் ஓமந்தை பாலமோட்டை பகுதியில் 32 வயதுடைய இளைஞரொருவர் கத்திக்குத்துக்கு இலக்காகியிருந்தார். தனிப்பட்ட தகராறு காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் உக்கிரமடைந்த நிலையில் இவர் பலமுறை நெஞ்சிலும், வயிற்றிலும் மிக ஆழமாக கத்திக்குத்துக்காளானார்.

அதீத இரத்தப் போக்கினால் மயக்கமுற்ற நிலையிலும் குடல் வெளித்தள்ளிய நிலையிலும் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் இரவு 9.15 அளவில் அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவ நிபுணர்களின் பெருமுயற்சியால் சத்திர சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு, காயமுற்றவர்களைக் காப்பாற்றுவது அரிதிலும் அரிது.

இவ்விடயத்தில், இணைந்து பணியாற்றிய மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களதும், உழைப்பு மெச்சுதலுக்குரியது என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.(5-4-299)

# வீடு புகுந்து நகை, பணம் திருட்டு
## பொலிஸார் விசாரணை

(குருமன்காடு)

வவுனியாவில் பட்டப்பகலில் வீடு புகுந்து நகை மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ள நிலையில் மோப்ப நாயின் துணையுடன் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். நேற்று முன்தினம் மதியம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, பண்டாரிக்குளம், மாடசாமி கோவில் வீதியில் உள்ள வீடு ஒன்றில் வசித்து வந்தவர்கள் உறவினர் ஒருவரின் நிகழ்வுக்குச் சென்ற வேளை இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அங்கு இருந்த நான்கு பவுண் நகை மற்றும் 5 ஆயிரம் ரூபாய் பணத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

வீட்டின் உரிமையாளர் வீடு திரும்பிய நிலையில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது தெரிய வந்தது. இதனையடுத்து பண்டாரிக்குளம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர்.

சம்பவ இடத்திற்கு வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.ஏ.ஏ.எஸ்.ஜயக்கொடி தலைமையில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5-4-250)

# கிரவல் அகழ்வு ஒருவர் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கூழாமுறிப்பு பிரதேசத்தில் அனைத்து திணைக்களங்களின் அனுமதியோடு வழங்கப்பட்டிருக்கின்ற அனுமதிப் பத்திரத்தை பயன்படுத்தி முறைகேடாக அளவுக்கு அதிகமான கிரவல் அகழ்ந்து செல்வது மக்களால் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

இந் நிலையில் நேற்று முன்தினம் அங்கு அளவுக்கதிகமான கிரவல் அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருந்த பைக்கோ இயந்திரத்தையும் அதனுடைய சாரதியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (5-4-281)

# ஒரு லட்சம் அபிவிருத்தித் திட்டம் மக்கள் மயப்படுத்தப்படும்
## அங்கஜன் எம்.பி

(சாவகச்சேரி)

கடந்த வருடம் நிறைவான கிராமம் செயற்றிட்டம் எந்தக் குறையும் இன்றி மக்களை சென்றடைந்தது போல் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு இலட்சம் அபிவிருத்தி வேலைத்திட்டமும் விரைவில் மக்கள் மயப்படுத்தப்படும் என யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராமத்திற்கு மூன்று மில்லியன் திட்டம் வரவே வராது என்றார்கள். நாட்டில் இவ்வளவு பிரச்சினைகள் இருக்கும் போது அபிவிருத்தி சாத்தியமில்லை எனப் பலர் குறை கூறினார்கள்.

இதுபோன்றே கடந்த வருடம் நிறைவான கிராமம் செயற்றிட்டத்தை ஆரம்பிக்கும் போதும் பலர் கூறினார்கள். ஆனால் நிறைவான கிராமம் செயற்றிட்டம் வெற்றிகரமாக நடந்தேறியது.

அதேபோன்று மக்களின் தேவைப்பாடான இந்த வேலைத்திட்டத்தையும் வெற்றிகரமாக மக்கள் மயப்படுத்துவோம்.

அதற்கான நிதிகளும் கிடைக்கப்பெற்று விட்டன. எனவே ஒரு இலட்சம் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்தி அதனூடாக வரும் பிரதிபலன்கள் மக்களை வந்தடைய வழிவகை செய்வோம்.

தற்போதைய இந்த நெருக்கடி நிலையில் இருந்து மீண்டெழ இந்த வாழ்வாதார திட்டங்களை சிறப்பாக பயன்படுத்தி கிராம மக்கள் தமது வருமானத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (5-4-30)

# வீதியைப் புனரமைக்கக்கோரி ஆளுநருக்கு பொதுமக்கள் கடிதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட 13 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள கிளாலி காயன் கடவை இணைப்பு வீதியினை புனரமைத்துத் தருமாறு எழுதுமட்டுவாழ் தெற்கு மக்கள் வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

குறித்த கோரிக்கைக் கடிதத்தில் இவ் வீதியை தினமும் சுமார் 160 குடும்பங்கள் வரை பயன்படுத்தி வருகின்றன.

கிளாலியில் உள்ள மீனவர்கள் தமது கடலுணவுகளை கொடிகாமம் சந்தையில் சந்தைப்படுத்த குறித்த வீதியைப் பயன் படுத்தி வருகின்றனர்.

வெளி விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் குறித்த வீதியை பயன்படுத்தி வருகின்றனர். அதுமாத்திரமன்றி யாழ். மாவட்டத்தையும் - கிளிநொச்சி மாவட்டத்தையும் இணைக்கும் பிரதான வீதியாகவும் இவ்வீதி காணப்படுகிறது.

எனவே குறித்த வீதியின் தேவைப்பாட்டினை உணர்ந்து புனரமைப்புச் செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம் என மேலும் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (5-4-30)

# பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தினர் கவனயீர்ப்பு போராட்டம்



(தருமபுரம்)

பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி - பழைய மாவட்ட செயலகத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பெண்கள், சிறுவர்களின் உரிமையை பாதுகாத்தல், அதிகரித்து வரும் விலைவாசியை கட்டுப்படுத்தல் உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கி பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களும் எழுப்பப்பட்டன.

தொடர்ந்து குறித்த போராட்டக்குழுவினர் ஏ-9 வீதி ஊடாக மாவட்ட செலகம் வரை சென்று கவனயீர்ப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-316-100)

# இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை அறுவடை

(பனிக்கன்குளம்)

நஞ்சற்ற உணவுப்பொருட்கள் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் வவுனியாவில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நெற் செய்கையின் அறுவடை நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் வவுனியா பிராந்திய படைத் தலைமையகத்தினால் நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக வவுனியா, ரம்பவெட்டி பகுதியில் 124 ஏக்கர் நிலப் பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

இராணுவத்தினரால் தயாரிக்கப்பட்ட இயற்கை உரத்தை மாத்திரமே பயன்படுத்தி குறித்த நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இது சிறப்பான விளைச்சலைக் கொடுத்திருந்த நிலையில் நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த நெல் அறுவடை நிகழ்வில் சிவில் பாதுகாப்பு படைத் தளபதி லெப்டினன் கேணல் சூரிய அஸ்மல, வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, சிவில் பாதுகாப்பு படை வீரர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-250)

# சந்தையில் விற்பனை மேடை அமைத்துத் தருமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி மரக்கறிச் சந்தையில் நுகர்வோர் மற்றும் வியாபாரிகளின் நலன் கருதி மேடை அமைப்பினை உருவாக்குமாறு சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் க.தர்சன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற விசேட அமர்வின் போதே அவர் குறித்த கோரிக்கையை முன்வைத்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பொதுச் சந்தையின் பழக்கடைகள் மற்றும் வெற்றிலைக் கடை போன்றவற்றில் மேடை அமைப்பு உள்ள போதிலும் மரக்கறிக் கடையில் அந்த வசதி இல்லை. மரக்கறிகளை நிலத்தில் வைத்து விற்பனை செய்யும் நிலையே காணப்படுகிறது.

இதனால் சுகாதார ரீதியான பிரச்சினைகள் ஏற்படக் கூடும். அத்துடன் மரக்கறி வகைகளும் சேதமடையும் நிலை காணப்படுகிறது.

கடந்த காலத்தில் மரக்கறிச் சந்தையில் மேடை அமைப்பதற்கென நகர சபையால் நிதி ஒதுக்கப்பட்டது. அந்த நிதியை இன்றுவரை பயன்படுத்தாமைக்குக் காரணம் என்ன? என மேலும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார். (5-4-30)

# போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது



(அராலி)

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயிலங்காடு பகுதியில் 90 போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சுன்னாகம் பொலிஸார் மற்றும் இராணுவ புலனாய்வு பிரிவினர் ஆகியோர் இணைந்து இந்நடவடிக்கையை மேற்கொண்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (5-4-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரின் திருப்பதி பயணம் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு விசாரணை

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ கடந்த வருடம் இந்தி யாவின் திருப்பதி ஆலயத் துக்கு தனிப்பட்ட ஜெட் விமா னம் மூலம் பயணத்தை மேற்கொண்டமை தொட ர்பில் விசாரணைகளை ஆரம்பிக்க இலஞ்சம் அல் லது ஊழல் குற்றச்சாட் டுகளை விசாரணை செய்யும் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

2021 டிசெம்பர் 31 ஆம் திகதி ஊடகவியலாளர் தரிந்து உடுவகெதரவினால் தாக்கல் செய்யப்பட்ட முறை ப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்க ப்பட்டுள்ளன.

இந்த தகவலை இலஞ் சம் அல்லது ஊழல் குற்றச் சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு எழுத்துபூர்வமாக குறித்த ஊடகவியலாளருக்கு தெரிவித்துள்ளது.

ஜெட் பயணம் குறித்த செய்திகள் ஊடகங்களில் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியதையடுத்து. பிரதமரின் நெருங்கிய சகா ஒருவரால் விமானம் திருப்பதி பயணத்திற்காக பரிசாக வழங்கப்பட்டது என பிரதமரின் தலைமை அதிகாரி யோஷித ராஜபக்ஷ தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# தங்கம் வெளிநாட்டு கையிருப்பில் வீழ்ச்சி

(கொழும்பு)

தங்கத்தின் கையிருப்பு மற்றும் வெளிநாட்டு கையி ருப்பு வீழ்ச்சியடைந்துள்ள தாக தகவல்கள் வெளி யாகியுள்ளன.

இலங்கை மத்திய வங்கியினால் நாட்டின் தங்கத்தின் கையிருப்பில் மேலும் ஒரு தொகுதி விற் பனை செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் தங்கத்தின் கையிருப்பு 3.1 தொன்னில் இருந்து 1.6 ஆக குறைவடைந்துள்ளது.

இதேவேளை 2021 ஆம் ஆண்டு டிசெம்பரில் 3.1 பில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்ட வெளிநாட்டு கையிருப்பு கடந்த ஜனவரி மாதம் 2.3 பில்லியன் டொலராக வீழ்ச் சியடைந்துள்ளது. (நி)

# இன்னும் மூன்று மாதத்திற்குள் மருந்தில்லாது மக்கள் இறப்பர்

## சபையில் எச்சரித்தார் ராஜித



(கொழும்பு)

நாட்டில் வெளிநாட்டு கையிருப்பு வரையறு க்கப்பட்டதை தொடர்ந்து மருந்து பொருட்கள் இறக் குமதி மட்டுப்படுத்தப்பட் டுள்ளது.

இதனால் எதிர்வரும் மூன்று மாத காலத்திற்குள் மருந்து தட்டுப்பாடு தீவிர மடைந்து, பல நோயாளிகள் மருந்தில்லாமல் உயிரி ழுக்க நேரிடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாரா ளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித் தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சுகா தார அமைச்சின் கீழ் இயங் கும் தேசிய மருந்துகள் ஒழுங்குப்படுத்தும் அதிகார சபை சட்டத்தின் கீழ் ஒழு ங்கு விதிகள் மீதான விவா தத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## சகல செல்வங்கள் அருளும் கிருஷ்ண ஜெயந்தி



கண்ணன் தமது பஞ்சாயுதத்து டன் தாய், தந்தையருக்கு தரிசனம் காட்டி தன்னை யமுனை நதிக்கு அப்பால் உள்ள ஆயர்பாடிக்கு கொண்டு செல்லும் படி கூறி னான். அதன்படியே வசுதேவர் கிருஷ்ணனை கூடையில் வைத்து சுமந்து கொண்டு சென்றார்.

அப்போது சிறைக்கதவு தானாக திறந்து வழிவிட்டது. பலத்த மழை கொட்டியது. யமுனை நதி வழிவிட குழந்தை மீது மழை பெய்யாமல் இருக்க ஆதிசேஷன் குடைபோல் படம் எடுத்து சென்றது.

யசோதை பெற்றெடுத்த மாயை என்ற பெண் குழந்தையை எடுத்து வந்து தேவகியிடம் வசுதேவர் சேர்த்தார்.

கம்சனும் தேவகியிடம் இருந்த மாயை, அவளது 8 ஆவது குழந்தை என்று எண்ணி அதனை கொல்லும் பொருட்டு ஆகாயத் தில் எறிந்தான்.

அப்போது மாயை என்னும் அக்குழந்தை கம்சனிடம், 'என்னை கொல்ல முடியாது. உன்னை கொல்வதற்கு என்று பிறந்த கண்ணன் கோகுலத்தில் நந்த கோபன் - யசோதை வீட்டில் வளரு கிறான்' என்று கூறியது.

### சீடை, முறுக்கு படைப்பது ஏன்?

கிருஷ்ண ஜெயந்தி அன்று சீடை, முறுக்கு முக்கியமாக செய்ய வேண் டும். பகவான் குழந்தையாக யசோதா விடம் வளர்ந்தார்.

அப்போது குழந்தைக்கு நோய் விளைவிக்காததும், ஆரோக்கிய மானதுமான சீடை, முறுக்கை யசோதா அப்போது அளித்தார். கோபம் வந்தால் பற்களை நற, நற என்று கடிப்போம்.

குழந்தைகளுக்கு கோபத்தை குறைப்பதற்காகவும், மூர்க்க குணத்தை தணிப்பதற்காகவும் கிருஷ்ணருக்கு யசோதா சீடை, முறுக்கு போன்றவற்றை தின்பண்ட மாக வழங்கினார். இதை நினைவு கூரும் வகையில் கிருஷ்ண ஜெயந்தி அன்று சீடை, முறுக்கை படைத்து கண்ணனை வழிபடுகின்றோம்.

### குறும்புகளின் மன்னன்

ஆயர்பாடியில் வளர்ந்து வந்த கண்ணன் செய்த குறும்புகளும், லீலைகளும் ஏராளம்.

குறும்புகள் செய்யும் சிறுவனாக, மாடு மேய்க்கும் சிறுவனாக, குழலூ திடும் கலைஞனாக, மகாமல்லர்களை வென்ற மல்யுத்த வீரனாக, இராஜ தந்திரியாக, சிறந்த தூதராக, சாரதியாக பக்தர்களை தக்க சமயத்தில் காத்து அருள் புரியும் ஆபத்பாந் தவனாக, தன் மீது அம்பு எய்த வேடனுக்கும் முக்தி அளித்தவனாக கண்ணன் செய்த லீலைகள் ஏரா ளம்.

(தொடரும்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 500 |
| தக்காளி | 140 | 140 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 90 | 60 |
| கோவா | 200 | 240 | 250 |
| கரட் | 420 | 480 | 600 |
| பூசணி | 150 | 150 | 200 |
| புடோல் | 200 | 240 | 200 |
| வாழைக்காய் | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 200-250 | 400 |
| பெரிய வெங்காயம் | 170 | 140 | 180 |
| பாகற்காய் | 300 | 320 | 400 |
| வெண்டிக்காய் | 260 | 180 | 320 |
| கருணைக் கிழங்கு | 110 | 100 | 120 |
| பயற்றங்காய் | 300 | 450 | 300 |
| லீக்ஸ் | 220 | 240 | 250 |
| பீற்றூட் | 300 | — | 300 |
| கறிமிளகாய் | 500 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 900 | 800 | 1100 |
| போஞ்சி | 200 | 240 | 300 |
| கத்தரித்தம்புள்ள | 300 | 280 | 260 |
| கீரை - 1 பிடி | 70 | 60 | 80 |
| தேசிக்காய் | 150 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 70-90 |
| இராசவள்ளி | 200 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 160 | 180 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 70 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 25 | 40 |
| ஈரப்பலா | 110 | 80 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி அமைச்சர் பதவிக்கு பசில் தகுதியற்றவர்

## உலபனே சுமங்கல தேரர் ஆவேசம்

(கொழும்பு)

**தகுதியற்றவர்கள் தகுதியற்ற இடங்களுக்கு நியமிக்கப்பட்டதனால் இந்த நாடு பாரிய பொருளாதார நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளதாக உலபனே சுமங்கல தேரர் தெரிவித்தார்.**

அமைச்சர் பசில் ராஜபக்ஷ நாட்டின் நிதி அமைச்சராக பதவி வகிக்க தகுதியற்றவர் என குற்றம் சுமத்தி உலபனே சுமங்கல தேரரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைக்காக நீதிமன்றம் சென்றிருந்த போது அவர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாட்டை இலங்கைப் பிரஜைகள் ஆள வேண்டும். வேறு நாட்டுப் பிரஜைகள் ஆட்சி செய்வதனை நாம் விரும்ப வில்லை.

இந்த நாடு பாரிய பொருளாதார நெருக்கடி நிலையை எதிர்நோக்கியுள்ளது. அதற்கு பிரதான ஏதுவாக நாட்டின் சட்டத்திற்கு புறம்பான வகையில் நிதி அமைச்சர் ஒருவர் பதவி வகிப்பதாகும்.

நாட்டில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் சுதந்திர தின நிகழ்வில் பாரியளவில் எரிபொருள் பயன்படுத்தப்பட்டது. இதற்காக ஒரு பில்லியன் ரூபாய் பணம் செலவிடப்பட்டுள்ளது.

ஒரு புறம் தேவையற்ற செலவு செய்யும் அரசாங்கம் மறுபுறம் மக்கள் மீது அதனை சுமத்துகின்றது.



தகுதியற்றவர்கள் தகுதியற்ற இடங்களுக்கு நியமிக்கப்பட்டதனால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையே இதுவாகும்" என அவர் தெரிவித்தார். (நி)

## தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)

பிரிவெனா ஆசிரியர்கள், அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விசேட உதவிப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் 5,000 கொடுப்பனவு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சேவைகளில் உள்ள சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பான அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 (IV) இன் ஏற்பாடுகள் மேற்படி ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## தாதியர்களின் பணிப்புறக்கணிப்பு 2 ஆவது நாளாக முன்னெடுப்பு

(கொழும்பு)

தாதியர்கள் உள்ளிட்ட 18 சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்பு போராட்டம் 2 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

தங்களது கோரிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக சுகாதார அமைச்சரினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த துணை மருத்துவ சேவை ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

சம்பள உயர்வு உள்ளிட்ட 7 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து தாதியர்கள் உள்ளிட்ட 18 சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் காலை முதல் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இதன் காரணமாக பல மருத்துவமனைகளின் சேவைகள் பாதிப்படைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## முச்சக்கரவண்டிகளுக்கு மாற்றீடாக நான்கு சக்கர வாகனம் உள்நாட்டில் அறிமுகம்

(கொழும்பு)

இலங்கையில் முச்சக்கர வண்டிகள் மற்றும் உந்துருளிக்கு மாற்றீடாக உள்நாட்டில் நான்கு சக்கர வாகனமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனம் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டு விட்டதாகவும், விரைவில் உள்ளூர் சந்தையில் சுமார் 12 இலட்சம் ரூபாவுக்கு அறிமுகப்படுத்தப்படும் என்றும் குறித்த உள்ளூர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த வாகனம் 814 கிலோ எடையை சுமந்து செல்லக்கூடிய இயலுமை கொண்டுள்ளதாகவும் இதில் ஐந்து பேர் வரை பயணிக்க முடியும் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் இந்த வாகனம் 200சிசி இயந்திர வலு கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## இன்று ஒரு தகவல்

### உள்ளமும் பள்ளமும்

அரங்கங்களிலும் சரி பயணங்களிலும் சரி கியூ வரிசைகளிலும் சரி சுற்றியிருப்பவர்களைப் பரம எதிரிகளாக எண்ணும் எண்ணம் பலரிடம் இருந்து வருகிறது.

கைபடக்கூடாது, கால்படக் கூடாது, இருமக் கூடாது, தும்மக்கூடாது, சிரிக்கக்கூடாது, பொருட்களை அங்கங்கு வைக்கக்கூடாது என்றெல்லாம் ஆயிரத்தெட்டு கட்டுப்பாடுகளோடு மற்றவர்கள் நம்மிடம் நடந்து கொள்ள வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

இவள் என்னைவிட அழகா? இவன் என்னை விடப் படித்தவனா? இவர் என்னை விடப் பணக்காரரா? என்றெல்லாம் மனதுக்குள் மகாபாரத யுத்தமே நடந்து கொண்டிருக்கும்.

இவையனைத்தும் காரணமற்ற, அர்த்தமற்ற, தர்க்கமற்ற நினைப்புகள்.

அந்தக் குறுகிய நேரத்திற்குள் சுயநலப்பேய் சுயரூபம் எடுத்து ஆடத் தொடங்கும்.

இப்படியெல்லாம் எண்ணுபவர்கள், அந்தச் சில மணி நேரத்தை அல்லது பயணத்தை அமைதியற்றதாக ஆக்கிக் கொள்கிறார்கள்.

சில தவறு நிகழ்ந்து விட்டாலும் பொறுமை காட்டாது முகத்தைக் கடுமையாக மாற்றிக் கொண்டு நாலு வார்த்தை சொல்லி மற்றவர்கள் மனத்தையும் புண்ணாக்கித் தாங்களும் சலிப்படைகிறார்கள். அத்தோடு விட்டால் பரவாயில்லை. அவர்களது நடவடிக்கைகளை வேண்டாவெறுப்பாகக் கவனித்துக் கொண்டும் இருப்பார்கள். இது ஏன் புரியாத புதிர்.

சிறுசிறு நடவடிக்கைகளை வைத்து உடனிருப்பவர்களைப் பற்றி எடைபோடுவது முறையாகாது. அந்தக் கணிப்புச் சரியாக இராது என்பதும் உறுதி.

இத்தகைய அவசர முடிவுகளை வைத்துக் கொண்டு அவர்கள் மீது பாய்வதும் பொருந்தம் அற்றதே.

நீங்கள் உங்கள் பெருந்தன்மையை வெளிப்படுத்துங்கள்! புன்னகை பூக்கப் பேசுங்கள். கண்ணாடியென அவர்களும் அதே குணங்களோடு உங்களிடம் பிரதிபலிப்பார்கள்.

இத்தகைய செயல்களின் மூலம் இரு நன்மைகள் இருக்கின்றன.

ஒன்று அந்த நேரத்தில் தேவைப்படும் சிறு சிறு உதவிகளை நாம் வெற முடியும்.

இரண்டாவது மன ஒருமைப்பாடு குலையாமல் இருக்கும்.

அதன் மூலம் பயணத்தின் நோக்கம் எதுவோ அல்லது பயணத்தின் விளைவு எதுவோ அது தொடர்பான விடயங்களைப் பற்றிச் சிந்திக்க வல்லது. உரிய இடத்தைச் சேர்ந்தவுடன் ஆக்கபூர்வமாகச் செயற்பட முடியும்.

அப்படி இல்லாமல் தேவையற்ற செயல்களின் மூலம் மன அமைதியைச் சிதைத்துக் கொண்டால் நினைப்பு அவற்றை விட்டுவிட்டு அகல மறுக்கும் காரியங்கள் சறுக்கும். அரங்கமாக இருப்பின் உரிய நிகழ்ச்சியை இரசிக்க முடியாமல் போய்விடும்.

முன்பின் அறியாதவர்களிடம் கூடப் பெருந்தன்மையுடன் நடந்து கொண்டு நற்பெயர் எடுக்க வேண்டும் என்ற மனப்பான்மைக்கு உரமிட்டால் அது பூத்துக் குலுங்கிக் காய்த்துச் சுவை மிக்க வாழ்வைக் கனியாக்கித் தரும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## ஆமையும் மந்திரக்கோலும்

(தொடர்ச்சி)

“இதை வைத்துக் கொண்டு என்ன செய்வது? இது என்ன செய்யும்?” என்று கேட்டது ஆமை. “என்ன செய்யும் என்று நீயே அதனிடம் கேட்டுத் தெரிந்துகொள்” என்று கூறிவிட்டு மறைந்து விட்டாள் தேவதை.

“மந்திரக்கோலே மந்திரக்கோலே நீ என்ன செய்வாய்?” என்று மந்திரக்கோலைப் பார்த்துக் கேட்டது ஆமை.

“மலை மலையாக உணவைத் தருவேன்
மலை மலையாக கறியைத் தருவேன்
உலகமே தின்ன அள்ளித் தருவேன்
தின்று முடித்தாலும் மீதம் இருக்கும்”

என்று மந்திரக்கோல் பாடி முடிக்கவும் வித விதமான உணவுகள் அடுக்கடுக்காக ஆமையின் முன் வந்தன. ஆஹா என்று உணவை நோக்கப் பாய்ந்த ஆமை எல்லாவற்றையும் வேக வேகமாக தின்று தீர்த்து ஏப்பம் விட்டது. பின் அந்த மந்திக் கோலுடன் வீட்டுக்கு மீண்டும் பறந்து போனது. வீட்டுக்குப் போனதும் வீட்டிலிருந்த எல்லாரையும் கூப்பிட்டு மந்திரக்கோலைக் காட்டியது.



“மந்திக்கோலே மந்திரக்கோலே நீ என்ன செய்வாய்?” என்றது.

“மலை மலையாக உணவைத் தருவேன்
மலை மலையாக கறியைத் தருவேன்
உலகமே தின்ன அள்ளித் தருவேன்
தின்று முடித்தாலும் மீதம் இருக்கும்.”

என்று சுவையான உணவுகளை குவித்து வைத்தது மந்திரக்கோல். அப்போதே சாப்பிட ஆரம்பித்த எல்லோரும் அந்த நாள் முழுக்க சாப்பிட்டுக் கொண்டே இருந்தார்கள்.

“கேட்டதும் மலை போல உணவை குவித்துத் தருகி றதே! இந்த மந்திரக்கோலை வைத்து எல்லோரிடமும் புகழையும் பாராட்டையும் பெற்று விடலாமே” என்று யோசனை செய்தது ஆமை.

மறுநாள் காலை மந்திரக்கோலைத் தூக்கிக் கொண்டு அரண்மனைக்குப் போனது. “அரசே! இந்தக் கொடிய பஞ்சத் துக்கு நான் முடிவு கட்டப் போகிறேன்” என்று கூறி காட்டில் உள்ள எல்லா விலங்குகளையும் வரவழைத்து விட்டது.

“என்ன செய்யப் போகிறாய்?” என்று கேட்டார் காட்டு ராஜா.

அனைவர் முன்பாகவும் மந்திரக்கோலை எடுத்து நீட்டிய ஆமை, “மந்திரக்கோலே மந்திரக்கோலே நீ என்ன செய்வாய்?” என்று கம்பீரமாகக் கேட்டது.

“மலை மலையாக உணவைத் தருவேன்
மலை மலையாக கறியைத் தருவேன்
உலகமே தின்ன அள்ளித் தருவேன்
தின்று முடித்தாலும் மீதம் இருக்கும்” என்று பாடி வழக்கம்போல உணவு வகைகளை தாராளமாகத் தந்தது மந்திரக்கோல்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்

09

“தருகை எது வாயினும் தயங்கேன்” என்று கூறினான். கேட்பது எதையும் தருவதாய் வாக்கும் அளித்தான்.

“யான் கேட்பது பொன்னும் பொருளும் அல்ல; பூவும் வழிபாடும் அல்ல; உன் நன்மகன் இராமன்! அவனை என்னுடன் அனுப்புக” என்றார் முனிவர்.

கேட்டதை அரசனால் மறுக்க முடியவில்லை. அதேசமயத்தில் மகனை விட்டுப் பிரியவும் அவனால் இயலவில்லை.

“அதைத் தவிர வேறு ஏதேனும் கேட்டால் உவப்பேன்” என்றான்.

“வந்ததே அவனுக்காகத்தான்; தருவேன் என்று கூறியபின் மறுப்பு ஏன்?” என்றார் முனிவர்.

“துறவிக்கு இவன் எவ்வகையில் உதவுவான்; இவனை மறப்பதற்கு வழி தேடின் நலமாகும்” என்றான் வேந்தன்.



“நான் துறவிதான்; அறம் தழைக்க அவனை அழைக்கின்றேன். இழைக்கும் வேள்விகளை அழிக்கும் அரக்கரை ஒழிக்கும் வகைக்கு அவன் வந்து உதவ வேண்டும்” என்றார் முனிவர்.

“போர்ப் [illegible] காணாத பச்சிளம் [illegible] கன் என் மகன்; தேர்ப் படை கொண்டு உமக்குத் துணையாக நானே வருகிறேன்” என்றான் வேந்தன்.

“கேட்டது தருவேன் என்றாய்; வேட்டது தருவாய் என்று கேட்டேன்; வாய்மை தவறாத மன்னன் நீ;

இப்பொழுது வாய் தவறுகின்றாய்; [illegible] உன் மகன்பால் வைத்த நேசமும் உன்னை இழுத்துப் பிடிக்கின்றன; இருதலைக் கொள்ளி எறும்பு போல் உன் நிலைமை ஆகிவிட்டது. மறுத்தலைச் சொல்லும் உன் மாற்றம் வியப்புக்கு உரியது” என்றார் முனிவர்.

நீரினின்று எடுத்துப் போட்ட மீனின் நிலைமையை மன்னவன் அடைந்தான்; எதிர்பாராத சூழ்நிலையில் எது பேசுவது என்பது தெரியாமல் தவித்தான்; “தவிர்க்க” என்றும் சொல்ல இயலவில்லை; “செல்க” என்று வாழ்த்தி அனுப்பவும் முடியவில்லை; “முடியாது” என்று முடிவு கூறவும் இயலாமல் தவித்தான்.

வசிட்டர் தசரதனைப் பார்த்து, “உம் பாசம் போற்றத்தக்கது தான்; அதனால் உன் மகனுக்கு நாசம் விளைவித்துக் கொள்கிறாய்; குடத்து விளக்குப்போல் உன் மகனை வளர்க்கிறாய்; அவனைத் தடத்தில் விட்டுத் தழைக்கச் செய்ய வழி விடுக; காற்று வரும்போது தூற்றிக் கொள்வது ஏற்றம் தரும்.

கல்வி கரையற்றது; கற்க வேண்டியவை இன்னும் உள; படைக்கலம் பயின்ற மாமுனிவன், உன் மகன் கரை ஏறக் கிடைத்த மரக்கலம் என அறிக, ஆசானாக வந்த அறிஞர் அவர்; அவருடன் அனுப்புக; அரச முனிவர் ஆதலின் விரசுபடைக் கலன்கள் பல அவரிடம் உள்ளன; அவற்றைத் தக்கவர்க்குத் தரக் காத்து இருக்கிறார்;

“உன் மகன் வீரம் மிக்கவன்” என்று தெரிந்தால் அவற்றை அவனுக்கு அளிப்பது அவர் உறுதி; வாய்ப்புக்கள் வந்து கொண்டே இருப்பதில்லை;

அதைத் தவறவிட்டால் வழுக்கி விழ வேண்டுவதுதான். நீர் அவருக்கு உதவுவது எளிது; அல்லதுவிட அந்த வாய்ப்பை உம் மகனுக்குத் தருவது வலிது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரக்கமற்ற அநியாய உலகில் ஒரே ஒரு நபரை நீங்கள் நேர்மையான மனிதனாக மாற்ற முடியும். அந்த நபர் நீங்கள்தான்.

~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நடக்கக்கூடாததெல்லாம் நடக்கும்போது பொலிஸார் எதற்கு?

தமிழர் தாயகத்தில் கொலை, கொள்ளை, களவு, போதைவஸ்து பாவனை, வீதி விபத்துக்கள், சட்டவிரோத மண்ணகழ்வு என அனைத்தும் சர்வசாதாரணமாக நடக்கின்ற போது பொலிஸார் எதற்கு என்பதுதான் பொதுமக்களின் கேள்வியாகவுள்ளது.

போக்குவரத்துப் பொலிஸார் மரங்களுக்குப் பின்னால் மறைந்திருந்து வாகனங்களை இடைமறித்துச் சோதிக்கின்றனர்.

ஆனால் விபத்துக்கள் இம்மியும் குறைந்த பாடில்லை.

தவிர, போக்குவரத்து நெருக்கடி இருக்கக்கூடிய இடங்களில் நிலைமையைச் சுமுகமாக்குவதற்குப் பொலிஸார் எவரும் கிடையாது.

ஆனால் தென்பகுதியில் போக்குவரத்து நெருக்கடியான நேரங்களில் மூன்று நான்கு பொலிஸார் களத்தில் நின்று போக்குவரத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருப்பர்.

எனினும் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் போக்குவரத்துப் பொலிஸாரின் சேவை அறவே இல்லை எனலாம்.

ஆக, மந்திரி பிரதானிகள் வடக்கு மாகாணத்துக்கு வருகைதரும்போது மட்டும் போக்குவரத்துப் பொலிஸார் மிகவும் சுறுசுறுப்பாக கடமையாற்றுவர்.

இவ்வாறு போக்குவரத்துப் பொலிஸாரின் சேவை போதுமானதாக இல்லாமையினால் வாகன நெருக்கடிகளும் அதனால் ஏற்படக்கூடிய முறுகல் நிலைகளும் விபத்துக்களும் தாராளமாக நடந்தாகின்றன.

நிலைமை இதுவாக இருக்கையில், வட பகுதியில் இடம்பெறுகின்ற களவு, கொள்ளை, வீடுடைப்பு என்பவற்றுக் குறைவேயில்லை.

ஆம், கடந்த சில தினங்களுக்கு முன்னர் வேலணைப் பகுதியில் நான்கு நல்லினப் பசு மாடுகள் இரவோடு இரவாக வெட்டப்பட்டுள்ளன.

இந்தக் காரியம் தீவகத்தில் முன்னர் கடுமையாக இருந்தபோது; தீவகத்திலுள்ள சிவில் அமைப்புகள் குரல் கொடுத்ததன் காரணமாக, நிலைமை ஓரளவுக்குத் தணிந்திருந்தாலும் தற்போது மீண்டும் களவாக மாடுகளை வெட்டுகின்ற சம்பவங்கள் தீவகத்தில் தீவிரமாகியுள்ளதையே வேலணையில் நடந்த மேற்போந்த சம்பவம் சுட்டி நிற்கிறது.

இவ்வாறு நல்லினப் பசுக்கள் களவாக வெட்டப்படும்போது பசு வளர்ப்பவர்கள் அதில் நின்றும் விலகுவதைத் தவிர வேறு வழியில்லை என்றாகிவிடுகிறது.

பொலிஸ் நிலையங்கள், உப பொலிஸ் காரியாலயங்கள், காவல் பணிக்கென ஏகப்பட்ட பொலிஸார் என்ற கட்டமைப்பு இருக்கின்றபோதிலும் களவாக மாடு வெட்டும் சம்பவம் நடக்கின்றதெனில், பொலிஸார் எதற்காக இருக்கிறார்கள் என்ற கேள்வி பொது மக்களிடம் எழுவதில் நியாயம் இருக்கவே செய்கிறது.

எனவே இதுவிடயங்களில் தலைமைப் பொலிஸ் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் பொலிஸ் பொறுப்பதிகாரிகளை காலத்துக்குக் காலம் இடமாற்றம் செய்து, பொலிஸ் சேவையை ஊழலற்றதாக ஆக்குவதும் அவசியமாகும்.

## எல்லைதாண்டிய 56 இந்திய மீனவர்களை நாடு கடத்துவதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து, சட்டவிரோதமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 56 இந்திய மீனவர்களை எதிர்வரும் 9ஆம் திகதிக்கு பின்னர் நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட மேற்படி மீனவர்கள் கடந்த வருடம் டிசம்பர் 19 ஆம் திகதி ஊர்காவற்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதனையடுத்து, அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

பின்னர் அவர்கள் மீண்டும் கடந்த ஜனவரி 25ஆம் திகதி ஊர்காவற்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதன் பின்னர் நாடு கடத்துவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு மத்திய நிலைய த்திடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து, குறித்த 56 பேரும் இயக்கச்சி தனிமைப்படுத்தல் மையத்துக்கு அனுப்பப்பட்டனர்.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் நிறைவடைந்ததன் பின்னர் யாழ் சிறைச்சாலைக்கு அழைத்துவரப்பட்டு, நாடு கடத்தும் பொருட்டு, நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் குடிவரவு குடியகல்வு முகாமிடம் ஒப்படைக்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிறைச்சாலை தலைமையகம் தெரிவித்துள்ளது. (ம)

## கொடிகாமம் வேம்பிராயில் மோ.சைக்கிள் விபத்து
### சிறுமி உட்பட மூவர் படுகாயம்

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேம்பிராய் சந்திப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 6 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சிறுமி உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

புத்தூர் வீதி ஊடாக பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களில் ஒன்று மீசாலை- வேம்பிராய் பகுதியில் கிளை வீதி ஒன்றினுள் திருப்ப முற்பட்ட வேளையில் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மந்துவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த 8 வயது சிறுமி கால் முறிந்த நிலையிலும் 37 வயதான அவரது தாய் தலையில் படுகாயமடைந்த நிலையிலும் மீசாலை வடக்கைச் சேர்ந்த 17வயது இளைஞன் காலில் படுகாயமடைந்த நிலையிலும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## யாழ். போதனாவில் 24 பேர் உட்பட வடக்கில் மேலும் 37 பேருக்கு கோவிட்

யாழ். போதனா வைத்தியசாலையில் ஒரு வயதும் 8 மாதமுமான ஆண் குழந்தையுடன் 24 பேர் உட்பட வடக்கில் மேலும் 37 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சீ.ஆர் பரிசோதனைகளில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில்,

யாழ். போதனா வைத்தியசாலையில் 24 பேர் (ஒரு வயது ஆண் குழந்தை உட்பட), பூவரசன்குளம் பிரதேச வைத்தியசாலையில் 5 பேரும் (16 வயது பெண், 50 வயது ஆண் உட்பட), பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் - ஒருவர் (66 வயது முதியவர்), மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஒருவரும் (53 வயது பெண்), கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் 2 பேர் (26 மற்றும் 39 வயது பெண்கள்), முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர் (32 வயது ஆண்), இரணைமடு விமான படைவீரர்கள் 3 பேர் என இவ்வாறு 37 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம)

## வல்வெட்டித்துறையில் முதியவரின் சடலம் மீட்பு

வல்வெட்டித்துறை கொத்தியால் ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் இருந்து முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த தேவசிகாமணி விவேகானந்தன் (வயது-81) என்பவராவார்.

மேற்படி முதியவர் தூக்கில் தொங்கிய நிலையில் இருப்பதாக வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு அறிவித்தார். (ம-60)

## சாதாரண தர பரீட்சைக்கான விண்ணப்ப காலம் நீடிப்பு

2021ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைக்கான விண்ணப்ப காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த விண்ணப்பக்காலம் எதிர்வரும் 10 ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்தது.

இந்நிலையில், விண்ணப்பதாரிகளின் நலன் கருதி எதிர்வரும் 17ஆம் திகதி வரை குறித்த விண்ணப்ப திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### குருவும் சீடரும்

'ஹோமா என்னும் பறவையைப் பற்றி வேதங்கள் பேசுகின்றன. இந்தப் பறவை வானத்தில் மிக உயரத்தில் வாழ்கிறது. வானத்திலேயே முட்டை இடுகிறது. அந்த முட்டை அதிக உயரத்திலிருந்து விழுவதால் கீழே வருவதற்குப் பல நாட்களாகும். அப்படி வந்து கொண்டிருக்கும்போதே முட்டை பொரிந்து குஞ்சு வெளிவரும். குஞ்சும் கீழ்நோக்கி வரத் தொடங்கும். அப்போது அதன் கண்கள் திறக்கும். இறகுகள் முளைக்கும். பார்வை வந்ததும், தான் கீழ்நோக்கிச் செல்வதையும் தரையில் வீழ்ந்தால் அடிபட்டுச் சின்னாபின்னமாகி விடுவோம் என்பதையும் உணரும். உடனே இறக்கைகளை அடித்துக்கொண்டு, தாய்ப் பறவையை நோக்கி வேகமாக மேலே பறந்து சென்றுவிடும்.'


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

73

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



(17) சாட்டி - அறுவடையானபின் உழாது கிடக்கும் நிலம், உரமிடப் பட்டிருக்கும் நிலம், (18) குளக்கீர் - குளத்தில் மதகையடுத்துள்ள வயல், குளம் பார்த்த வயல், (19) நகரி - அரசுக்குரிய புறம்போக்கு, (20) பெரும்பேறு - அரசுக்குரிமையான நிலம், (21) சூன் - புறம்போக்கு நிலம்,(22) குடிவார நிலம் - குடிகட்குப் பயிரிடும் உரிமையுள்ள நிலம் (23) பள்ளத்தாக்கு - இரண்டு மேடுகட்கு நடுவேயுள்ள நிலம், (24) பள்ளம் - பள்ளத்தில் உள்ள நிலம், தாழ்ந்த நிலம்,(25) தில்லியம் - புதிதாகத் திருத்தப்பட்ட விளைபுலம்,(26) உறாவரை - பிறர் உள்ளே வராத எல்லையை உடைய நிலம், (27) எடார் - வெளிநிலம், (28) செய்யுள் - விளைநிலம்,(29) தொய்யில்/ செறிப்பு - உழுநிலம்,(30) பண்ணை - வயல். (31) செந்திரம் - செய்தல் நிலம், (32) பாசல் - பசிய விளைநிலம், (33) நன்னிலம்/ நன்செய் - நெல் விளையும் புலம், (34) படப்பு - கொல்லை, (கொல்லை என்பது பொதுவாக வீட்டின் பின்புறத்தைக் குறிக்கும்), (35) துடவை - உழவுக் கொல்லை, (36) விதைப்புனம் - புதுக்கொல்லை, (37) முதை - பழங்கொல்லை, (38). பின்னை - வீட்டுக் கொல்லை, (39) திருத்து - நன்செய் நிலம், (40) தாக்கு - நெல் வயல்,(41) வற்புலம் - மேட்டு நிலம், (42) தகர் / தராய் - மேட்டு நிலம், (43) கருஞ்செய் - நன்செய் நிலம்,(44) காங்கவீனம் - தினைவிளையும் நிலம்,(45) தினைப்புனம் - தினை விளையும் நிலம்,(46) மலைப் புனம் - தினைவிளையும் நிலம், (47) சேற்றுப்புழி - உழப்பட்ட நிலம்,(48) விரைகால் - விதைக்குரிய நிலம், (49) தடி - சிறு வயல், (50) காணியாட்சி - உரிமை நிலம், (51) காடாரம்பம் - நீர்ப்பாசனமில்லாத நிலம், (52) வட்டகை - அடைப்பு நிலம், (53) எகபலி - ஒருபோக நிலம், (54) ஓராண் காணி - ஒருவனுக்கே உரிய நிலம்,(55) காணி நிலம் - நூறு குழி அளவுள்ள நிலம் (56) கந்தக விரைப்பாடு - ஐந்து ஏக்கர் அளவுள்ள நிலம், (57) முழு மனை - 60 அடி நீளமும் 40 அடி அகலமும் உள்ள நிலம்,(58) அரைக்காணி - நூற்றறுபதில் ஒரு பங்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### நீட்டலளவாகு பெயர்

புடைவைக் கடைக்குச் செல்லும் ஒருவர், தனக்குரிய துணியைத் தேர்வு செய்துவிட்டு "மீற்றர் என்ன விலை?" என்று கேட்பாராகில் கடைக்காரர் வைத்திருக்கும் மீற்றர் சட்டத்தைக் கேட்பதாக யாரும் கருத மாட்டார்கள். துணியைக் கேட்கிறார் என்றே பொருள் கொள்ளப்படும்.

அதேபோல் கயிறு வாங்க வருகின்ற ஒருவரும் கடைக்காரரிடம் "மீற்றர் என்ன விலை?" எனக் கேட்கக் கூடும். இங்கும் மீற்றர் எனுஞ்சொல் அளவைத்தடியைக் குறிக்காது. மாறாக கயிற்றைக் குறிக்கிறது.

எனவே, மீற்றர் எனும் நீளத்துக்கான அளவு தன்னைக் குறிக்காமல் துணி, கயிறு என்பவற்றுக்கு ஆகிவருவதால் நீட்டலளவாகு பெயர் எனப்படுகிறது.

தம்பி நூறு மீற்றரைக் குறுகிய காலத்துள் ஓடி முடித்தான் எனும் வாக்கியத்தில் நூறு மீற்றர் என்பது ஓடுதளத்தைக் குறிப்பதால் அதுவும் நீட்டலளவாகு பெயராகிறது.

இந்தியத் தமிழகத்தையும் ஈழத் தமிழகத்தையும் பதினெட்டு மைல் பிரித்திருக்கிறது என்று கூறின் அது நீரிணையின் குறுக்களவைக் கூறுவதால் அது நீட்டலளவாகு பெயர் எனப்படுகிறது.

எனவே, நீளத்தைக் குறிக்கின்ற அளவீடுகள் மீற்றர், கிலோ மீற்றராய் இருந்தாலென்ன, அங்குலம், அடி, யார், சங்கிலி, பர்லாங்கு, மைல் எனப் பழைய முறையில் அமைந்தாலென்ன, சாண், முழம், பாகம் என நம்மவர் முறையில் கொண்டாலென்ன, அவை தம்மைக் குறிப்பிடாமல் தம்மைப் பயன்படுத்தி அளவீடு செய்யப்படும் பொருள்களைக் குறிக்குமாயின் அவையெல்லாம் நீட்டலளவாகு பெயர் எனப்படும்.

### தற்போது பாவனையில் இல்லாத நீட்டல் அளவை அலகுகள்

பண்டைய காலத்தில் தமிழர்கள் மத்தியில், தற்போது பாவனையில் இல்லாத, நீட்டல் அளவை சம்பந்தமான பல அளவைகள் இருந்தன. அவற்றுள் சில கீழே தரப்படுகின்றன.

ஒரு நாளில் இரண்டு ஏர்கொண்டு உழக்கூடிய நிலம் அணைப்பு எனப்பட்டது. இது கிட்டத்தட்ட ½ ஏக்கராகும். 4 அணைப்புள்ள நிலத்தை காடு என்றும் அழைத்தார்கள். ஆள்மட்ட அளவு ஆட்பிரமாணம் எனப்பட்டது. பெருவிரல் அளவு அங்குட்டம் எனப்பட்டது.

பாத அளவினை அடிவட்டம் என்றார்கள். மனைக்குரிய 72 சதுர அளவு அங்கணம் எனப்பட்டது. ஓர் ஆள் அள[illegible] எனப்பட்டது. ஆள் [illegible] என்பது ஒரு மனிதன் உயர அளவைக் குறித்தது. இலாச்சம் என்பது ஒரு அளவு கருவியாகும். ஒரு அங்குல விரலிறை அளவை இறை என்றார்கள். ஒன்றின் உட்பக்க அளவு உட்டெளிவு என்றார்கள். சோழர் கால அளவுகோல் உலகளந்த கோல் எனப்பட்டது.

கடைகை கலத்துக் கோல் என்பதும் சோழர் கால அளவையாகும். கங்கை கோல் என்பது பல்லவர் கால அளவாகும். கசாக்கிரம் என்பது ஒரு மயிர் நுனி அளவாகும். கட்டளவு என்பது கட்டி அளக்கும் அளவாகும். கண்டி என்பது 75 ஏக்கர் நிலத்தைக் குறித்தது. கந்தக விரைப்பாடு என்பது 5 ஏக்கர் நிலத்தைக் குறித்தது.

முழத்தை கரம் என்றும் அழைத்தார்கள். 24 விரல் கொண்ட முழத்தை கிட்டு என்றார்கள். 1089 சதுர அடி நிலம் குண்டு எனப்பட்டது. ஏரி நீரின் ஆழம் காட்டும் அளவு கல் குத்துக்கல் எனப்பட்டது. அளவு காண நீரில் நடும் கோல் கெண்டைக் கோல் எனப்பட்டது. குலோத்துங்கன் சிறீ பாதம் அளந்த கோல் என்று ஒரு அளவு கோல் இருந்தது.

கோட்டை விரைப்பாடு என்பது சுமார் 1.62 ஏக்கரைக் குறிக்கும். பசுவின் பாதச் சுவட்டின் அளவு நிலத்தை கோஷ் பாதம் என்றார்கள். சசிகன்னம் என்பது பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரத்தைக் குறித்தது. சாட்கோல் என்பது சாண் அளவு கோலாகும். 18 முழம் கொண்ட புடைவை 1 சாம்பு எனப்பட்டது. 34 அங்குல அளவுள்ள கோல் சிதம்பரபதம் எனப்பட்டது. மழையின் ஓர் அங்குல அளவு சுழி எனப்பட்டது. இது செவி எனவும் அழைக்கப்பட்டது.

செய் என்ற அளவு 1.75 ஏக்கர் நிலமாகும். நிலத்தில் கட்டப்படும் பாத்தி, செறு என்றும் அழைக்கப்பட்டது. தழுவு என்பது இரு கை இணைக்கும் அளவைக் குறிக்கும், தோரை என்பது நான்கு விரற்கிடை அளவாகும். நளுசன் கோல் பல்லவர்கால அளவுகோலாகும். நாலு முழம் கொண்ட அளவு யுகம் எனப்படும், வில்லைப்பிடிக்கும் கையின் உள் அளவு விற்பிடி எனப்படும்.

அகல், அசனம், அவதி, ஆடம், இகல், இடம், கச்சம், கட்டளை, கடன், கண்டகம், கந்தகம், கயிறு, கலப்பை, குணிப்பு, குரோசம், குறுக்கம், கூறு, கெவியூதி, கைகூப்பு, சங்கை, சச்சவைகோல், சம்பார்க்கார்த்தம், சுந்தரபாண்டியன் கோல், சுமுத்திரைக் கோல், நிவர்த்தனம், [illegible] நூல், நெடுமுழக் கச்சை, [illegible], பங்கு, பஞ்சிற்றுகள், பட்டி, பட்டிகா, படகம், படலிகை, படாகம், பதம், படின்சன் கோல், பரிவர்த்தனம், பல்ல, பன்னிருசன் கோல், பாவு, பிக்கல், புட்டி, பெருங்குழி, மடக்கு, மருகுந்திக் கோல், மளிகைகோல், மாபனம், மார், மாற்று, முக்கடை, யவை, யூகை, யெளதம், விதஸ்தி, வியங்குலம் போன்றவையும் நீட்டளவை அலகுகள் ஆகும்.

### தெறிப்பு அளவை

மனித வாழ்வுடன் ஒன்றாக கலந்து அவனது வாழ்வில் ஆதிக்கம் செலுத்தும், அதேவேளை மனிதனால் எவ்விதத்திலும் கட்டுப்படுத்த இயலாத, பருவகாலம் தொடர்பான கணிப்பீடுகள் நாகரிகத்துக்கு நாகரிகம், காலத்திற்குக் காலம் அதன் அளவுவகுதிகள், ஒழுங்கு, எண்ணிக்கை என்பவற்றில் வேறுபட்டு வந்துள்ளன.

ரோமசாம் இராச்சியத்தின் ஆரம்பத்தில் (700 BC) மார்ச், ஏப்ரல், மே, ஜூன், குவாணன்டிலஸ், செக்ஸ்டிலஸ், செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் எனும் 10 மாதங்களே இருந்தன. முதல் நான்கு மாதங்களும் கிரேக்க, ரோம தெய்வங்களான Mars, Aphrodite, Maia, Juno வையும் குறிப்பிட்டன. அத்துடன் இந்த 10 மாதங்களும் மொத்தம் 304 நாட்களை மட்டுமே கொண்டிருந்தன.

கி.மு. 713 ஆம் ஆண்டளவில் 2 ஆம் ரோமச் சக்கரவர்த்தி 11 ஆவது மாதமாக ஜனவரியையும் 12 ஆவது மாதமாக பெப்ரவரியையும் சேர்த்துக் கொண்டார். இந்தப் 12 மாதங்களும் கூட மொத்தம் 355 நாட்களை மட்டுமே கொண்டிருந்தன.

கி.மு. 1 ஆம் நூற்றாண்டில் (கி.மு. 46) ஜூலியஸ் சீசரினால் (Julius Caesar) ஆண்டின் முதல் மாதம் மார்ச்சிலிந்து ஜனவரிக்கு மாற்றப்பட்டது.

அத்துடன் இக் காலப் பகுதியில் Julius Caesar, அவருடைய மருமகன் Augustus Caesar ஆகியோரின் பெருமையை வெளிப்படுத்த 5 ஆவது மாதம் ஜூலை எனவும் 6 ஆவது மாதம் ஓகஸ்ட் எனவும் மாற்றப்பட்டது. இந்தக் கலண்டர் ஆண்டு 365 நாட்களை மட்டுமே கொண்டிருந்தது.

கி.பி. 1582 இல் 13 ஆவது போப்பாண்டவர் கிரகோரி (Pope Gregory XIII) என்பவரால் லீப் வருடம் (Leap Year) அறிமுகப்படுத்தப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## +1,253 பேருக்கு...

யாளம் காணப்பட்ட கோவிட்-19 தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 621,985 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## 35 பேர்...

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15,656 ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

## தமிழர்களுக்...

கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களது பிரச்சினைகள் என்பது, உள்ளார்ந்த குறைபாடுகளால் எழுந்தவை. அவை அவதானத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

இந்த பிரச்சினைகளின் ஆரம்ப புள்ளிகள் தொடர்பாக இன்னும் அவதானம் செலுத்தப்படவில்லை. எனினும் இவை தீர்க்க முடியாத பிரச்சினைகள் இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சீனாவுடனான உறவை மதிக்கும் அதேவேளை, இந்தியா உடனான உறவின் அளவுக்கு விஸ்தீரணமானது இல்லை என்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (ம)



















## ஆரியகுளத்தில்...

அரச நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வரும் குறித்த இளைஞர் தனது பணி நிமிர்த்தம் நேற்று அதிகாலை சென்ற சமயம் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அல்வாய் தெற்கைச் சேர்ந்த இந்திரசிங்கம் நிருபன் (வயது - 32) என்ற இளைஞரே பரிதாபமாக உயிரிழந்தவர் ஆவார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-18.33.60.104)

## 11 இந்திய...

நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 11 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஜே.கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 3 இந்திய இழுவைப்படகுகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

அதில் இருந்த 11 பேர் கைது செய்யப்பட்டு மயிலிட்டி துறைமுகப் பகுதிக்கு கொண்டுவரப்பட்டு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களை நீரியல்வள திணைக்கள அதிகாரிகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் ஒரு படகில் இருந்த இரண்டு மீனவர்கள் இழுவை வலைகளை அறுத்து விட்டு தப்பிச் செல்ல முற்பட்ட சமயம் கையில் காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு சிகிச்சை அளிக்க அனுமதி வழங்குமாறும் மன்றில் கோரப்பட்ட நிலையில் சிறைச்சாலையில் சிகிச்சை அளிக்கவும் மன்று உத்தரவிட்டது. (ம-18.33.60)

## அதிகாரப் பரவல்...

யுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நெருக்கமான மற்றும் நட்புறவை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு சமத்துவம், நீதி, சமாதானம், கௌரவம் ஆகியவற்றினை உறுதிப்படுத்துவதே இலங்கையின் நலனிற்கு உகந்த விடயம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார். இதற்கு அதிகாரப்பரவல் மிக முக்கியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடற்றொழிலாளர்கள் பிரச்சினையை மனிதாபிமான அணுகுமுறையின் மூலம் கையாளவும் வன்முறையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும் நீண்டகாலமாக ஒருமித்த கருத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தினர். மீன்பிடித் துறைக்கான கூட்டுப் பணிக்குழுவில் தொடங்கி இருதரப்பு வழிமுறைகள் முன் கூட்டியே சந்திக்க வேண்டும் என்று அவர்கள் ஒப்புக் கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இலங்கைக் கடற்...

தேவானந்தா திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்தியக் கடற்றொழிலாளர் பிரதிநிதிகளுடன் நேற்று நடத்திய காணொளி மூலமான கலந்துரையாடலிலேயே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழகத்தில் அமைந்துள்ள இந்தியாவிற்கான இலங்கையின் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்த கடற்றொழிலாளர் பிரதிநிதிகள், தொப்புள்கொடி உறவுகளான தங்களின் வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு மாற்று தொழில் முறையில் ஈடுபடும் வரைக்குமான கால அவகாசத்தினை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேலும், கைப்பற்றப்பட்டுள்ள தங்களின் மீன்பிடிப் படகுகளை ஏலத்தில் விற்பனை செய்கின்ற செயற்பாடுகளையும் மீள்பரிசீலனை செய்யுமாறும் கோரப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பண்பாட்டு கலாசார ரீதியாகவும் பல்வேறு தேவைகள் காரணமாகவும் தமிழக உறவுகளுடனான தொப்புள்கொடி உறவு வலுப்படுத்த வேண்டும் என்பதை உளமார தான் எதிர்பார்ப்பதாகவும் அதற்காக இலங்கையின் கடல் வளம் அழிந்து போவதை அனுமதிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

அதேபோன்று, பயன்படுத்த முடியாதவை என்ற அடிப்படையில் இந்தியக் கடற்றொழிலாளர்களினால் கைவிடப்பட்ட மீன்பிடிப் படகுகளே ஏலமிடப்படுவதாகவும் தெளிவுபடுத்தினார்.

மேலும், பேச்சுவார்த்தைகளை நடத்தி ஒரு சுமூகமான தீர்வினை காண்பதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், பேச்சுவார்த்தை மூலம் சுமூகமான தீர்வினை எட்டுவது ஒருபுறமிருக்க, இலங்கை கடற்பரப்பினுள் நுழைந்து சட்டவிரோத தொழிலில் ஈடுபடுவதை இந்தியக்கடற்றொழிலாளர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (ம)

## மீன...

விடுத்துள்ளனர்.


இலங்கைக்கான இந்தியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் ஜேக்கப்புக்கும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்றைய தினம் மாலை, கொழும்பு - 3 இல் உள்ள பிரதி உயர்ஸ்தானிகரின் வதிவிடத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது, தமது வாழ்வாதாரம் சிதைக்கப்படுவதற்கும் மாதகல் மற்றும் வத்திராயன் பகுதியில் சடலங்களாக கரையொதுங்கிய மீனவர்களின் இறப்புக்கு நீதிகோரியும் வடமராட்சி, சுப்பர்மடம் பகுதியில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மீனவர்களின் நியாயமான கோரிக்கைக்கு கூர்நோக்குடனான நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பு மீனவர்களிடையேயும் தொடர்ச்சியாக நிலவிவரும் இம்முரண்பாடுகள் ஈழத்தமிழர்களுக்கும் தாய்த் தமிழக உறவுகளுக்குமிடையே விரிசலை ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் முகமாக, இலங்கை மீனவர்களின் கடல் எல்லைகளை வரையறை செய்வதற்கேனும் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோள் இரு பாராளுமன்ற உறுப்பினர்களாலும் முன்வைக்கப்பட்டுள்ளது. (ம)

## 5 இந்திய...


துறை திணைக்கள யாழ்ப்பாண மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜெயராஜசிங்கம் சுதாகரன் இதனைத் தெரிவித்துள்ளார். (ம-18.33)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் கொரோனா பரவல் மீண்டும் அதிகரித்து வருகின்றது

## யாழ். மாவட்ட அரச அதிபர் மகேசன் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுப் பரவல் மீண்டும் அதிகரித்து வருகிறது. இந்த அதிகரிப்பு ஆரோக்கியமானது அல்ல என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனவரி மாத முற்பகுதிலிருந்து கொரோனாத் தொற்றுப் பரவல் அதிகரித்துச் செல்லும் நிலைமை காணப்படுகின்றது. தற்போது அனைத்துச் செயற்பாடுகளும் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் குறிப்பாக போக்குவரத்து, கற்றல் நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுவரும் நிலையில் கொரோனாத் தொற்றின் நிலை மேலும் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புள்ளதாகச் சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

ஆகவே, சுகாதார அமைச்சினால் இறுதியாக வெளியிடப்பட்ட சுகாதார நடவடிக்கைகளுக்கு அமைவாகப் பொது மக்கள் தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கட்டாயமாக முகக் கவசம் அணிய வேண்டும். ஒன்றுகூடல்களைப் பாதுகாப்பான முறையில் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக தேவையற்ற பயணங்கள், நடமாட்டங்களைக் கட்டுப்படுத்த வேண்டும்.

தற்போதைய நிலையில் தடுப்பூசி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை 62 வீதத்திற்கு மேற்பட்டோர் முதலாம் கட்டத் தடுப்பூசியையும் அதற்கு குறைவானவர்கள் இரண்டாம் கட்டத் தடுப்பூசியையும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்பவர்கள் சற்றுக் குறைவாக இருந்தபோதும் தற்போது மக்கள் ஆர்வம் காட்டி இந்தத் தடுப்பூசியை பெற்றுவருவது அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

கொரோனாத் தடுப்பூசிகளைப் முறையாகப் பெற்றுக்கொள்வது தொடர்பில் சுகாதாரப் பகுதியினரினால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. எனவே, பொதுமக்கள் வீண் வதந்திகளை நம்பாது தவறாது



தடுப்பூசிகளைப் பெற்றுத் தங்களையும், தங்கள் சார்ந்த குடும்பத்தவர்களையும் பாதுகாத்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

அதிகரித்துச் செல்லும் கொரோனா நிலைமை இன்னும் தீவிரமடையும் பட்சத்தில் இதுதொடர்பில் மாற்று நடவடிக்கைகளை எடுப்போம்.

அதுமாத்திரமன்றி யாழ்.மாவட்டத்தில் டெங்கு அபாயமும் அதிகரித்து வருகிறது. எங்கள் புள்ளிவிபரத்தின்படி தற்போது யாழ்.மாவட்டமும் டெங்கு அபாய வலயத்திற்குள் அடங்குகின்றதொரு மாவட்டமாக உள்ளது. எனவே, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் ஏனையோருடன் பொதுமக்களும் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் கரிசனையுடன் செயற்படுமாறும் நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.

யாழ்.மாவட்டத்தில் மலேரியா அபாயம் காணப்பட்டபோதும் தற்போது அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. எனினும், பொதுமக்கள் இது தொடர்பிலும் மிகவும் விழிப்பாகச் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றார். (ம-18.33)


AAA GRAND MASTER
Trainers Center
077 667 0108 Viber 076 108 6777
பாடசாலை விடுமுறை நாட்களில் விசேட சதுரங்க (Chess) பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்
பயிற்சி நிலையங்கள்
யாழ்ப்பாணம், சாவகச்சேரி, நல்லூர், அச்சுவேலி, மானிப்பாய்.
(C-3741)

VACANCY Apex Travels
விமானப் பயணச்சீட்டு நிலையம்
Air Ticketing Office
Air Ticketing Staff
- English Knowledge & IT Knowledge
- Strong Communication Skills
- Experience Staff தேவை
Email - apextravelslk@gmail.com
Contact & Whatsapp - 0773504700
Experience Staffக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
(C-3735)





மணமகள் தேவை
வடமராட்சியில் 1984 இல் பிறந்த அஸ்வினி நட்சத்திரம், 12 இல் செவ்வாய், கனடா PR உடைய கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
தொடர்பு (C-3731)
077 865 8995

விரைவு பொதிகள் சேவை
DHL வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை 3 - 5 நாட்களுக்குள் வழங்கப்படுகின்றன.
Lanka Cargo Worldwide Express
இல. 315, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-3733) 076 283 2397





Easy Way To CANADA
Analyzed, Interviewed and Visa Applications submitted by Lawyers in Canada.
1) Work Visa
2) Education for Kids (5 - 17 Years)
Visa Consultancy Service
134, Adiyapatham Road, Thirunelvely. T.P:-0770385584
(C-3734)





வேலையாட்கள் தேவை
உடுவிலில் அமைந்துள்ள இந்து ஆலயத்திற்கு ஆலயத்தின் சமையலறையையும் மற்றும் ஆலயத்தின் சுற்றுப்புறச் சூழலையும் துப்புரவாகப் பேணிப் பாதுகாக்க வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.
தொடர்புகளுக்கு (10097)
075 447 2884

Happy Supermarket
உரும்பிராய்
வேலைக்கு ஆட்கள் தேவை
Full Time
- Salesman, Sales girls வயது: 20 - 28
- Data entry Operator - பெண்கள் எதிர்பார்ப்பு - Ms Office, GRN Entry, வயது 19 - 28
- Cashier பெண்கள் எதிர்பார்ப்பு:- A/L Pass வயது: 19 - 26
- Cleaning - பெண்கள்
(C-3739)
உரும்பிராய்
077 350 4700

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்
றாஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: றாஜ் - 077 679 6623
(10106)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.
076 825 7716 (ஆகாஸ்)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நெடுங்குளம் வீதியில் (A9 வீதியிலிருந்து 500m) சிறிய வீட்டுடன் 1 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விலை 50 இலட்சம் (தரகர் தேவையில்லை.)
(10091)
077 444 9119

LIVE IN CANADA
இலவச கருத்தரங்கு
கனடாவில் வேலைவாய்ப்புகள், நிரந்தர வதிவிடம், உயர்கல்வி வழிமுறைகளும் ஆலோசனைகளும்
13-02-2022 ஞாயிறு காலை - 11 மணி
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
முற்பதிவு அவசியம் 0777-068-777
(C-3684)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம் - புத்தூர் - கோப்பாய்
- நெல்லியடி - கொடிகாமம் - மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு - சுன்னாகம் - கிளிநொச்சி
- பருத்தித்துறை - வல்வெட்டித்துறை - சாவகச்சேரி
0768226240 DHL
(C-3679)

கடை வாடகைக்கு தேவை
மருதனார்மடம், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் 1500 சதுரஅடிக்கு மேல் கடை வாடகைக்கு தேவை.
(10102)
076 287 8655


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org